Des: Deltota Harees

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# AHARAM
# அகரம்

தரம் 5 - II வரை
எண்: 07 எழுத்து: 10 ஒக்டோபர் 2013
www.aharam.lk



## தாகம் தீர்க்கும் தண்ணீர்

17 OCT 2013
மாநகர சபை யாழ்ப்பாணம்



## அகில ரவிசன்க



## உச்ச இலக்கை அடைய துறைசார் நிபுணத்துவம்

மாதாந்த சிறுவர் சஞ்சிகை 40/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகில் பிரபலமான சில

# அருங்காட்சியகங்கள்



### லோவுர் அருங்காட்சியகம் ( Louvre Museum )

- இது பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் அமைந்துள்ளது.
- இது 1973இல் திறந்து வைக்கப்பட்டது.
- உலகில் மிகப்பெரிய அருங்காட்சியகங்களில் ஒன்றாக கருதப்படுகிறது.
- இதில் கண்ணாடி பிரமிட் அமையப்பெற்றுள்ளதுடன் 35000 ற்கும் அதிகமான வரலாற்று பொருட்கள் காணப்படுகின்றன.

### பிரித்தானிய அருங்காட்சியகம் ( British Museum )



- 1973இல் நிர்மாணிக்கப்பட்டது.
- இது லண்டனில் அமையப்பெற்றுள்ளது.
- மனித வரலாறு மற்றும் கலாசாரத்திற்கான அருங்காட்சியகமாக இது கருதப்படுகின்றது.
- இதில் 7 மில்லியனுக்கும் அதிகமான அருங்காட்சியகப் பொருட்கள் காணப்படுகின்றன.



### ஹெர்மிடேஜ் அருங்காட்சியகம் ( Hermitage museum )

- இது 1974இல் நிர்மாணிக்கப்பட்டது.
- ரஷ்யாவின் எசயிண்ட் பீட்டர்ஸ் பார்க்கில் அமையப் பெற்றுள்ளது.
- இது கலை கலாசார அருங்காட்சியகமாகும்.
- இதில் 3 மில்லியனுக்கும் அதிகமான அதிகமான அருங்காட்சியக தொகுப்புகள் காணப்படுகின்றன.

### கக் கென்ஹைம் பில்பாவோ (Gagg enheim Museum Bilbao)

- இதனை Frank Gehry வடிவமைத்தார்.
- இது 1997இல் திறந்து வைக்கப்பட்டது.
- ஸ்பெய்னில் உள்ள பில்பாவோ நகரில் இது அமையப் பெற்றுள்ளது.
- இது நவீன கால அருங்காட்சியகமாகும்.



### எகிப்து அருங்காட்சியகம் ( Egyptian Museum )



- இது எகிப்தின் கைரோவில் அமையப் பெற்றுள்ள உலகின் மிகச் சிறந்த அருங்காட்சியகங்களில் ஒன்றாகும்.
- இதில் 120 000 தொன்மையான பொருட்கள் காணப்படுகின்றன.
- இது 1902ல் நிர்மாணிக்கப்பட்டது.
- இது வரலாற்று அருங்காட்சியகமாக கருதப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்: 07 ஒக்டோபர், 2013 எழுத்து: 10

# உள்ளே...





06





உச்ச இலக்கை அடைய துறைசார் நிபுணத்துவம் 21




15



தீர்வு என்ன? 28



பிறருக்கு உதவி வாழ்வோம் 37




38




09

## பாடத்திட்டம்

| | | | |
|---|---|---|---|
| கணிதம் | 30 | தமிழ் | 26 |
| விஞ்ஞானம் | 33 | புலமைப் பரிசில் | 39 |



**பிரதம ஆசிரியர்**
டாக்டர் ஆகில் அஹ்மட் ஷரிபுத்தீன்

**ஆலோசனைக் குழு**
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

**உதவி ஆசிரியர்**
ஜே.எம். அஸீம் (நளீமி)

**தளக் கோலம்**
எம்.ஐ.எம். ஹரீஸ்



**தொடர்புகளுக்கு:**
அகரம்
77, தெமடகொட வீதி,
கொழும்பு - 09.
தொ.பே: 011 268 9324
பெக்ஸ்: 011 2686030
*www.aharam.lk*
E-Mail: *editor@aharam.lk*



**சந்தா விபரம்**
தனிப் பிரதி 40 /-
1 வருட சந்தா 700 /-
6 மாத சந்தா 350 /-


பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாடியதே நடக்கும்; தேடியதே கிடைக்கும்!

தம்பி தங்கைகளே! முஸ்லிம்களின் பெருநாட்கள் இரண்டு. முதலாவது தர்மத்தின் பெருநாள். இரண்டாவது, தியாகத்தின் பெருநாள். முதலாவது, பயிற்சி பெறும் பெருநாள். இரண்டாவது, படிப்பினை பெறும் பெருநாள்.

தியாகத்தால் நிரம்பிய வரலாறொன்றை நமக்கு ஞாபக மூட்டுவதற்காகவும் அந்த வரலாற்றிலிருந்து ஒவ்வொருவரதும் வாழ்க்கைக்குமாகப் படிப்பினை தருவதற்குமாக வேண்டி வருடாந்தம் இந்த தியாகத்தின் திருநாள் காலம் நம்மிடம் வந்து போகின்றது.

நபி இப்றாஹீம், அவரது மனைவி அன்னை ஹாஜர் இருவரதும் அருந்தவக் குழந்தை இஸ்மாயீல் ஆகிய மூன்று கதாபாத்திரங்களைக் கொண்டு இறைவன் பின்னிய காவியம் இந்தத் தியாக வரலாறு. வருடாந்தமும் இந்த வரலாறு மேடை மிம்பர்கள் முதல் சந்து பொந்துகள் எல்லாம் தொடர்பாடலின் அனைத்து ஊடகமாகவும் முழங்கப்படுகின்றது.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவை முழக்கங்க ளோடும் முழங்கும்போது ஏற்படும் சந்தர்ப்ப அச்சங்களோடும் மட்டும் சம்பவங்களாகவே முடிந்துவிடுகின்றன. அந்த முழக் கங்கள் பலபோது படிப்பினை மழையைப் பொழியவில்லை. பொழிந்தபோதும் அனேக உள்ளங்கள் நனைந்து பயிர் கொள்ளவில்லை.

கடந்தது கடந்ததாகவும் கிடைப்பது சரித்திரம் படைப்ப தாகவும் இருக்க, இந்த தியாக வரலாற்றில் மாணவர்களாகிய நமக்கிருக்கும் படிப்பினை என்ன என்பதனை தேடிக் கற்பது நமது கடமை. தேடிக் கற்பவர்கள்தானே மாணவர்.

நபி இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) தனது மனைவி யையும், குழந்தையையும் மனித சஞ்சாரமோ, வாழ்வாதார சாதனங்களோ அற்ற கொடும் வெய்யில் பாலை நிலத்தின் சுடுமணல் பரப்பில் துணையேதும் இன்றி விட்டுச் செல்கின் றார்கள். அப்போது அல்லாஹ்வின் ஏற்பாடு இது என்பதனையும், எப்போதும் அல்லாஹ் ஒருவனே உற்றதுணை என்பதனை யும் அன்னை அவர்கள் உணர்ந்தேற்றிருந்தார்கள். அல்லாஹ்வையே சார்ந்திருந்தார்கள்.

குழந்தைக்குத் தாகம் எடுக்கின்றது. தொண்டை வரள அழுகின்றது. அந்தச் சூழ்நிலையில் குழந்தையின் தாகம் தீர்ப்பதனைத் தவிர வேறொரு இலக்கு ஒரு தாய்க்கு இருக்க முடியுமா? அந்த இலக்கை நோக்கி அந்தத் தாய்க்கு இருந்த ஒரே பணி தண்ணீர் தேடுவதுதான். இறைவனின் கத்ரில் இருந்து நடக்கும் நிகழ்வு இது, இறைவன் எழுதியபடியே நடக்கும் என்று அந்த ஈமானியத் தாய் வாளாவிருக்கவில்லை. "சபா மர்வாக்கிடையில் தண்ணீர் தேடுதல்" பணிக்கூற்றாகிறது. அந்தப் பணியில் இரண்டு எட்டல்களை அவர் கொண்டிருந் தார். அவை, தண்ணீர் தேடி இயலுமான மட்டும் முயற்சிப்பது, இந்தத் தேடலுக்கிடையே குழந்தையையும் கவனித்துக் கொள் வதுமாகும். நீர் கிடைப்பதும், குழந்தை பாதுகாப்பாக இருப் பதும் நோக்குகள் ஆயின.

இந்தப் பக்கம் ஒருமுறையும், அந்தப் பக்கம் ஒருமுறையும் அவர் ஓடிப் பார்க்கின்றார். நீர் கிடைக்குமா எனத் தேடிப் பார்க் கிறார். நீர் தேடிப் பறவைகளே பறக்காத அந்த வெறும் பரப்பில் இப்படி ஒரு முயற்சி. அத்தோடு விட்டாரா அவர்? இல்லை மீண்டும், மீண்டும் இந்தத் தேடல் முயற்சி நடக்கின்றது. நீர் கிடைக்கும் என்ற நம்பிக்கையை விட அல்லாஹ் நீரைத் தருவான் எனும் நம்பிக்கைதான் அங்கே மிகைத்து நின்றது. அதற்காக அந்தத் தாய் தனது முயற்சியைக் கைவிடவில்லை.

தாய் தேடினாள், இறைவன் நாடினான். குழந்தையின் காலடியிலிருந்தே நீர் ஊற்றெடுத்தது. அன்று தொட்டு இன்று வரை 'நில் நில்' என்று அணையிட்டும் அள்ள அள்ளக் குறையாத வற்றா ஊற்றாக இலட்சோபலட்சம் மக்களின் தாகம் தீர்க்கின்றது ஸம் ஸம்.

நீரை ஒத்த உயிர் காக்கும் பல தேவைகளோடும் அன்னை ஹாஜரை ஒத்த முயற்சிக்கின்ற மனிதர்களுகான இடைவெளிகளோடும் இந்தச் சமூகம் தாகித்திருக்கின்றது. அந்த இடைவெளியை நிரப்பும் துறைசார் விற்பன்னர்களாக நீங்கள் ஆக வேண்டாமா?

இது உங்கள் இலக்காக இருக்கட்டும். உடனே உங்கள் பணிகள் தொடங்கட்டும். பணி செய்யும் பாதையில் உங்கள் எட்டல்களை வரையறுத்துக் கொள்ளுங்கள். எட்டல்களை தொட்டுக் கொள்வதற்கான கட்டுச்சாதத்தை தயார்படுத்துங்கள். அல்லாஹ்வின் நாட்டத்தில் நம்பிக்கை வைத்து உங்களது தேட்டத்துக்காகப் புறப்படுங்கள். இன்ஷா அல்லாஹ் இம்மை யின் அழகியதும் மறுமையின் அழகியதும் உங்களுக்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அல்குர்ஆன் கூறும் கதைகள்

தம்பி தங்கைகளே! கடந்த இதழ்களில் சனிக் கிழமை வாசிகள் (أصحاب السبت) பற்றிய கதையைப் படித்திருப்பீர்கள். கதைகளில் எமக்கு பாடங்களும் படிப்பினைகளும் ஏராளமாக இருக்கின்றன. அந்தப் படிப்பினைகள் எமது வாழ்க்கைக்கு பயனளிக்க வேண்டும். இந்த இதழிலே மீன் வயிற்றில் வாழ்ந்த ஒரு நபியின் சரித்திரத்தோடு உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அந்த நபி யார் என்று உங்களுக்குத் தெரியுமா? ஏன் அவரை மீன் விழுங்கியது தெரியுமா? அதைத் தான் உங்களோடு பகிர்ந்து கொள்ளப் போகின்றேன்.

இதன் பின்னர் நபி யூனுஸ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? தம் சமூகத்தாருக்கு அல்லாஹ்வின் வேதனை மூன்று நாட்களின் பின்னர் வரும் என்று கூறினார்கள். பின்னர் மக்களை விட்டு ஒதுங்கி விலகிச் சென்றார்கள். உண்மையில் நபி யூனுஸ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் இறைபணியில் பொறுமையுடனும் சகிப்புத்தன்மையுடனும் இருந்திருக்க வேண்டும் என அல்லாஹ் எதிர்பார்த்தான் போலும். இதைத் தொடர்ந்து நடந்த சம்பவங்கள் அதனை உணர்த்துவது போல அமைந்திருக்கிறது.

மக்கள் தமக்கு பயங்கரமான ஆபத்து வரப்

## மீன் வயிற்றில் வாழ்ந்த நபி யூனுஸ் (அலைஹிஸ்ஸலாம்)

நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களுக்கும் அவர்களது சமுதாயமாகிய எங்களுக்கும் வழிகாட்டுவதற்காகவும், துன்பங்களைக் கண்டு துவண்டு விடாமலிருப்பதற்காகவும் அல்லாஹ் நபிமார்களின் சரித்திரத்தை எடுத்துக் கூறுகின்றான். அந்நபிமார்களில் ஒருவர்தான் மீன் வயிற்றில் சில நாட்கள் வாழ்ந்த நபி யூனுஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்.

யூனுஸ் இப்னு மத்தா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அல்லாஹ்வால் தெரிவு செய்யப்பட்ட தூதராவார்கள். அவர்களை ஈராக்கின் மவ்சுல் பிராந்தியத்திலுள்ள நீநவா மக்களுக்கு வழிகாட்ட அல்லாஹ் அனுப்பி வைத்தான். அம்மக்களுக்கு வழிகாட்டும் பொறுப்பை நிறைவேற்ற நபி யூனுஸ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அயராது முயற்சித்தார்கள். மக்களை அல்லாஹ்வின் பக்கம் அழைத்தார்கள். அம்மக்களோ இறை நிராகரிப்பிலும் பாவச் செயல்களிலும் வழிகேட்டிலும் பிடிவாதமாக இருந்தார்கள். அதனால் நபி யூனுஸ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் உள்ளம் நொந்து போனார்கள்.

போவதை உணர்ந்து கொண்டார்கள். நிச்சயமாக தம்மை இறை தண்டனை சூழ்ந்து கொள்ளும் என்பதை நம்பினார்கள். இத்தண்டனையிலிருந்து தப்பிக்க என்ன வழி என சிந்தித்தார்கள். அல்லாஹ் அம்மக்களை பாதுகாக்க நாடிவிட்டான். அவர்களது உள்ளத்தில் தௌபா கேட்கும் உணர்வை ஏற்படுத்தினான். அவர்கள் இறைவனிடம் மன்றாடினார்கள்; அழுதார்கள். தமது தவறை ஏற்றுக் கொண்டார்கள். மன்னிக்குமாறு கெஞ்சினார்கள்; பணிந்து இறைஞ்சினார்கள்.

அல்லாஹ்வின் கருணைக்கு நிகர் அவனேதான். அவன் அளவிலா அன்பாளன். அவன் அச்சமுதாயத்தாரை மன்னித்து விட்டான். அவனது தண்டனையை அவனது கருணை முந்திவிட்டது. அவர்களை சூழவிருந்த இறை தண்டனை நீங்கிவிட்டது. மூன்றாம் நாளின் பின் தண்டனை இறங்கும் என நபி யூனுஸ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் எதிர்பார்த்தார்கள். அல்லாஹ் அவர்களை மன்னித்து

(08 ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஏ.ஆர்.எம். ஸஜீத் (இஸ்லாஹி)

عَنْ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ: مَا مِنْ أَيَّامٍ الْعَمَلُ الصَّالِحُ فِيهَا أَحَبُّ
إِلَى اللَّهِ مِنْ هَذِهِ الْأَيَّامِ يَعْنِي أَيَّامَ الْعَشْرِ قَالُوا: يَا رَسُولَ اللَّهِ وَلَا الْجِهَادُ فِي سَبِيلِ اللَّهِ؟ قَالَ وَلَا الْجِهَادُ فِي
سَبِيلِ اللَّهِ إِلَّا رَجُلٌ خَرَجَ بِنَفْسِهِ وَمَالِهِ فَلَمْ يَرْجِعْ مِنْ ذَلِكَ بِشَيْءٍ (أبو داود)

இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள். "துல்ஹஜ் மாதம் முதல் பத்து நாட்களில் செய்யப்படும் அமல்களைப் போல் அல்லாஹ்வுக்குப் பிரியமான அமல்கள் வேறு எதுவுமில்லை என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியபோது, அல்லாஹ்வின் பாதையில் போர் புரிவதை விடவுமா? என ஸஹாபாக்கள் கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் அல்லாஹ்வின் பாதையில் போர் புரிவதைவிடவும்தான். ஆனால், அவன் பாதையில் உயிரையும், பொருளையும் தியாகம் செய்து போராடி வீரமரணமடைந்தவரைத் தவிர என்றார்கள்." (அபூதாவுத்)

துல்ஹஜ் மாதத்தையும் அதிலுள்ள முதல் பத்து நாட்களில் செய்யப்படுகின்ற அமல்கள் அல்லாஹ் விடத்தில் எவ்வளவு பெறுமதிமிக்கதாகக் கருதப் படுகின்றன என்பதைப் பற்றியும் இந்த ஹதீஸ் விபரிக்கின்றது.

துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்களும் அல்லாஹ்விடத்தில் சிறப்புப் பொருந்திய, அதிக மான நன்மைகளைப் பெற்றுத்தரக்கூடிய நாட்க ளாகக் காணப்படுகின்றன. இத்தினங்கள் நபி இப் றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) மற்றும் அவர்களது புதல்வர் இஸ்மாஈல் (அலைஹிஸ்ஸலாம்) ஆகி யோர் நிறைவேற்றிய விடயங்களை நினைவு கூரு கின்ற தினங்களாகவும் அவர்களது வாழ்க்கையி லிருந்து முஸ்லிம்கள் பல பாடங்களைக் கற்றுக் கொள்கின்ற ஒரு காலப் பகுதியாகவும் அமைந் துள்ளது.

இத்தினங்களில் நபியவர்கள் இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளுள் ஒன்றான ஹஜ்ஜை நிறைவேற்றுவது, உம்ரா செய்வது, உழ்ஹிய்யா கொடுப்பது போன்ற அதிகமான அமல்களில் ஈடு பட்டதுடன் தனது தோழர்களையும் இவ்வாறான அமல்கள் செய்வதன் பால் ஆசையூட்டினார்கள்.

சிறுவர்களாகிய நாமும், இக்காலப் பகுதியில் எம்மால் இலகுவாகச் செய்ய முடியுமான சில அமல்களைச் செய்வதற்குப் பழகிக்கொள்ள வேண்டும். அந்த வகையில் லாஇலாஹ இல்லல் லாஹ், அல்லாஹு அக்பர், அல்ஹம்துலில்லாஹ் போன்ற திக்ருகளை அதிகமதிகமாக சொல்லுமாறு நபியவர்கள் பணித்துள்ளார்கள்.

"துல்ஹஜ் முதல் பத்து நாட்களில் செய்யப்படும் நல்லமல்களை விட அல்லாஹ்விடத்தில் பெரிய, அவனுக்கு விருப்பமான அமல்கள் வேறொன்றுமில்லை. ஆகவே, இத்தி னங்களில் லாஇலாஹ இல்லல்லாஹ், அல்லாஹு அக்பர், அல்ஹம்துலில்லாஹ் போன்ற திக்ருகளை அதிகமாக கூறுங்கள்." (அஹ்மத்)

அதே போன்று இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது தியாகத்தை நினைவு கூர்ந்து ஹாஜிகள் அனைவரும் அரபா மைதானத்தில் தரிக்கின்ற துல்ஹஜ் ஒன்பதாம் தினத்தன்று எமது முன், பின் பாவங்கள் மன்னித்துவிடக் காரணமான அரபா தின நோன்பினை முடிந்தளவு நோற்றுக்கொள்ள வேண்டும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் அரபா தின நோன்பு பற்றிக் கேட் கப்பட்டது. "முந்தைய மற்றும் பிந்திய வருடத்துப் பாவங் கள் அதன் மூலம் மன்னிக்கப்படுகின்றன எனப் பதிலளித் தார்கள்." (முஸ்லிம்)

இவை மாத்திரமன்றி, இத்தினங்களில் செய்யப் படுகின்ற நல்லமல்கள் ஏராளமாகவே காணப்படு கின்றன. சுன்னத்தான தொழுகைகள், ஸதகாக்கள், நோன்புகள், உறவுகளைப் பேணுதல், உழ்ஹிய்யாக் கொடுத்தல், பெருநாள் தொழுகைக்காகச் செல்தல்

(34 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸீரா: அழகிய முன்மாதிரி

இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தமது தஃவாப் பணியை மேற்கொண்டபோது அவரைச் சூழவிருந்த முழு உலகும் அவர்களை எதிர்த்து நின்றது. அலை போன்று கொந்தளித்த எதிர்ப்புக்கள் யாவும் அன்னாரின் உறுதியான உள நிலைப்பாட்டுக்கு முன்னால் அடங்கிப் போயின. அவர்களுடைய ஆளுமைக் கட்டடத்தின் ஓர் அங்கமாக அவர்களின் மன வலிமை இருக்கவில்லை. மாறாக, அதன் முழு வடிவமும் ஈமான் வேண்டி நிற்கும் மன வலிமையாகவே இருந்தது. மற்றொரு வார்த்தையில் இதை விட்டுக்கொடாமை எனலாம்.

லையும், மனவலிமையையும் தருகின்றது. இக்கட்டான சமயங்களில் துணிச்சாலன முடிவை எடுக்கவும் அது நிர்ப்பந்திக்கிறது. எனவேதான் நபிகளாரின் ஆளுமைக் குணங்களின் மொத்த வடிவமாக அண்ணலாரின் மனவலிமையைக் குறிப்பிடாலம்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மக்காவில் இருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் மேற்கொள்ளத் தயாராக இருந்தபோது குறைஷியர் நபிகளாரைக் கொன்றொழிக்கத் திட்டமிட்டுக் கொண்டிருந்ததை அவர்கள் அறிந்திருந்

# வெற்றிக்கு வழியமைக்கும் மன வலிமை

**உலுல் அஸ்ம் - இறைத் தூதர்கள் என்ற நூலிலிருந்து**

பொதுவாக சமூக வாழ்க்கையில் நபியவர்கள் விட்டுக் கொடுத்து மிக நெகிழ்வோடு செயற்பட்டிருக்கிறார்கள். இதற்கு ஹுதைபியா உடன்படிக்கை ஒரு சிறந்த உதாரணமாகும். எனினும், அகீதாவோடு ஓரிறை நம்பிக்கைக் கோட்பாடு தொடர்பான விடயங்களில் நபியவர்கள் மிகக் கண்டிப்பாக இருந்தார்கள். இதற்கு நெஞ்சுறுதி அடிப்படைக் காரணமாக இருந்தது. செல்வம், அதிகாரம், அந்தஸ்து முதலானவற்றைக் கொண்டு நபிகளாரின் தஃவாவுக்கு தடைபோட முற்பட்ட கொடிய குறைஷித் தலைவர்கள்கூட நபிகளாரின் இத்தகைய ஆளுமையால் பரிகசிக்கப்பட்டார்கள்.

மன வலிமை ஒரு தாஇயிடம் இறை சட்டத்திற்கு மதிப்பளிக்கின்றது. மார்க்க வரம்பை பேணுவதில் கண்டிப்பான போக்கை அது அவனிடம் உருவாக்குகின்றது. தவிர, அல்லாஹ்வின் மார்க்கத்தைப் போதிப்பதிலும் பரப்புவதிலும் ஏன், செயற்படுத்துவதிலும் கூட அவன் எதிர்கொள்ளும் இடர்களையும், துயர்களையும் சகிக்கும் ஆற்ற

தார்கள். எனினும், குறைஷியரின் சூழ்ச்சியை விட நபிகளாரின் நெஞ்சுரம் பலமாக இருந்தது.

அவ்வாறே உஹுத் போருக்குச் சற்று முன் நபியவர்கள் எதிரிகளோடு போராடும் விடயத்தில் தமது தோழர்களைக் கலந்தாலோசித்தார்கள். அவர்களுள் முதியோர் யுத்தத்தைச் சற்று காலம் தாழ்த்த அபிப்பிராயம் தெரிவித்தனர். ஆனால், பெரும்பான்மையாக இருந்த வாலிபர்கள் யுத்தம் செய்வதை ஆதரித்துக் கருத்துத் தெரிவித்தனர். பத்ர் யுத்தத்தில் பங்கு கொள்ளக் கிடைக்காத இழப்பை இதன் மூலம் ஈடுசெய்யலாம் என்பது வாலிபர்களின் எதிர்பார்ப்பாகும். நபியவர்கள் வாலிபர்களின் கருத்தை மதித்தார்கள். உடனே ஆயுதம் தரித்து யுத்தத்திற்கு தயாரான நிலையில் "தன் சமூகத்திற்காக ஆயுதம் தரித்த ஒரு நபி, தனக்கும் தன் எதிரிகளுக்குமிடையில் அல்லாஹ் தீர்ப்புச் சொல்லும் வரை அதைக் களைவது ஆகாது" எனக் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாகம் தீர்க்கும்

ஆலிப் அலி (இஸ்லாஹி)
www.aliaalif.tk



# தண்ணீர்



இன்று பூமியில் சனத்தொகை 700 கோடியையும் தாண்டிச் செல்கின்றது. அத்தோடு கோடிக்கணக்கான ஜீவ ராசிகள் இப்பூமியில் வாழ்கின்றன. இன்னும் எண்ணில டங்காத தாவர வகைகளும் புற்பூண்டுகளும் காணப்படு கின்றன. இவை அனைத்துமே இந்த அற்புத, அருளான நீரைப் பயன்படுத்தியே உயிர் வாழ்கின்றன. நீர் இல்லா விடின் இப்புவியில் உயிர் வாழ்க்கையே சாத்தியமற்றுப் போகும்.

**பூமியில் நீர் வளம்**

எமது பூமிப்பந்தின் மேற்பரப்பு 71சதவீதம் நீரால் நிரம் பியுள்ளது. மீதமுள்ள 29 சதவீதம்தான் நிலமாகும். அனைத்து ஜீவராசிகளுக்கும் நீரின் பயன்பாடு மிக அவசியம் எனக் கருதித்தான் இறைவன் அதிகூடிய வீதாசாரத்தில் நீரை எமக்கு அளித்துள்ளான் போலும்.

உலக நீர்ப்பரப்பில் 97.5 சதவீதம் உப்பு நீராகவும் 2.5 சதவீதம் நன்னீராகவும் உள்ளது. நன்னீர்ப் பரப்பிலும் 69 சதவீதம் பனிக்கட்டியால் மூடப்பட்ட பிரதேசமாகும். 30 சதவீதம் நிலக்கீழ் நீராகவும் 3 வீதம் நன்னீர் ஏரிகளும், நதி களும் எஞ்சிய பகுதி ஈரலிப்புத் தரைப் பிரதேசங்களுமாகும். ஆற்று நீர் மற்றும் நிலத்தடி நீர் என்பன பூமியின் மொத்த நீர் அளவில் 0.26 வீதம்தான். மொத்தமாகப் பார்க்கும் போது பூமியில் உள்ள நன்னீர் முழுவதிலும் வெறுமனே 0.007 வீதம் மட்டுமே பயன்படுத்த முடி யுமான நீராக உள்ளது.

கடலில் உப்பு நீர் இருப்பது போன்றே மனிதன் பருக முடியுமான விதத்தில் மதுரமான நீரையும் வல்ல நாயனே தந்த ருளியுள்ளான். நீர் வற்றி இல்லாது போனால் அல்லது பருக முடியாது உப்பு நீராகிவிட்டால் ஜீவராசிகளின் கதி என்னவாகிப் போகும்? இதனைத் திருமறை கூறுகின்றது.

"நீங்கள் பருகுகின்றீர்களே அந்த நீரைப் பார்த்தீர்களா? அதனை மேகத்தி லிருந்து நீங்கள் இறக்குகின்றீர்களா? அல்லது நாம் இறக்குகின்றோமா? நாம் நாடினால் அதனை (நீங்கள் பருக முடியாத) உப்பு நீராக மாற்றியிருப்போம்."

(56:68 - 70)

ஸூரா அல்முல்கின் இறுதி வசனத்தில் அல்லாஹ் வினவுகின்றான். "(நபியே!) நீர் கூறும்: உங்களின் தண்ணீர் பூமியினுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உறிஞ்சப்பட்டுப்) போய்விட்டால், அப் பொழுது ஓடும் நீரை உங்களுக்குக் கொண்டு வருபவன் யார் என்பதைக் கவனித்தீர்களா?" (67:30)

நீர் எனும் இவ்வருட்கொடையை நாம் பெற்றிருந்தாலும் எமது நடவடிக்கைக ளாலேயே அதனை நாம் மாசுபடுத்தி வருகின்றோம். அதனால் தான் உலக சனத்தொகையின் ஒவ்வொரு நான்கு பேரிலும் மூவர் அருந்துவதற்கு தூய நீரின்றி அவதிப்படுகின்றனர். எமது நாட்டிலும் கூட 25 மாவட்டங்களுள் 14 மாவட்டங்களில் வாழும் மொத்த சனத்தொகையின் 33 சதவீதமானவர் களுக்கு தூய குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## நீரின் மீது இருந்த அர்ஷ்

இப்பிரபஞ்சத்தை அதாவது அல்குர் ஆனின் பாணியில் வானம் மற்றும் பூமியைப் படைப்பதற்கு முன்னதாக அல்லாஹ்வின் அர்ஷ் கூட நீரின் மீது இருந்ததாக திருமறை கூறுவதைப் பாருங்கள். "மேலும், அவன்தான் வானங் களையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான். அவனுடைய அர்ஷ் நீரின் மேல் இருந்தது." (11:7)

நீர் தனது வானம், பூமி என்பன படைக்கப்பட முன்னரே இருந்திருக் கின்றது என்பதை விளங்க முடியும்.

## ஜீவராசிகள் யாவும் நீரிலிருந்தே படைக்கப்பட்டுள்ளன

உயிருள்ள ஒவ்வொன்றினதும் ஆரம் பமே நீரிலிருந்துதான் என்பதாக அல்லாஹ் திருமறையில் பல இடங்களில் கூறுகின் றான். "உயிருள்ள ஒவ்வொன்றையும் நாம் தண்ணீரிலிருந்து படைத்தோம் என்பதை காஃபிர்கள் பார்க்க வில்லையா?" (21:30)

மற்றுமோர் இடத்தில்,

"நிச்சயமாக வானங்களும், பூமியும் (முதலில்) இணைந்திருந்தன என்பதையும், இவற்றை நாமே பிரித்(தமைத்)தோம் என்பதையும், உயிருள்ள ஒவ்வொன் றையும் நாம் தண்ணீரிலிருந்து படைத்தோம் என்பதையும் காஃபிர்கள் பார்க்க வில்லையா? (இவற்றைப் பார்த்தும்) அவர்கள் நம்பிக்கை கொள்ளவில்லையா?" (21:30) (24:45) (25:54) என்று அல்லாஹ் வினவுகின்றான்.

இந்தத் திருமறை வசனங்களைச் சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். நமது உடலிலுள்ள உயிரணுவின் (Cell) உள்ளீ டாய் விளங்கும் Cytoplasm 80% சதவிகிதம் தண்ணீரையே அடிப்படையாய் கொண்டுள்ளது. மேலும் பெரும்பாலான உயிரினங்கள் 50% முதல் 90% வரை தண்ணீரையே அடிப் படையாய் கொண்டுள்ளன என்பது நவீன விஞ்ஞானத்தின் தரவுகள். இத்தரவுகள் நம்மை அடைய முன்பே இவ் வசனங்கள் அதன் யதார்த்தத்தை எவ்வளவு அழகாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றன.

"மேலும், எல்லா உயிர்ப் பிராணிகளையும் அல்லாஹ் நீரிலி ருந்து படைத்துள்ளான்; அவற்றில் தன் வயிற்றின் மீது நடப்ப வையும் உண்டு; அவற்றில் இரு கால்களால் நடப்பவையும் உண்டு; அவற்றில் நான்கு (கால்)களை கொண்டு நடப்பவையும் உண்டு; தான் நாடியதை அல்லாஹ் படைக்கிறான்; நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் பேராற்றலுடையவனாக இருக்கின்றான்." (24:45)

## அற்புதமான ஸம்ஸம் நீர்



புனித மக்கா நகரில் உள்ள ஸம்ஸம் கிணற்று நீரானது மிக அற்புதமானது. ஸம்ஸம் கிணறு வெறும் 18 அடி அகல மும் 14 அடி நீளமும் கொண்டதாகும். இதில் உள்ள தண் ணீரின் ஆழம் எப்போதும் சுமார் ஐந்து அடி மட்டுமே. இந்தக் கிணற்றில் இருந்து ஒவ்வொரு விநாடியும் தண்ணீர் இறைக்கப்பட்டுக் கொண்டே உள்ளது. வருடத்தின் எல்லா நாட்களிலும் மக்கள் அங்கே ஒன்று கூடுகிறார்கள். ஹஜ் காலத்திலும் ரமலான் மாதத்திலும் சுமார் 20 லட்சம் மக்கள் அங்கே ஒன்று கூடுகிறார்கள். அனைவருக்கும் இந்தக் கிணற்றில் இருந்து தான் குடிநீர் வினியோகிக்கப்படுகிறது. ஒவ்வொருவரும் 20 லீட்டருக்குக் குறையாமல் அந்தத் தண்ணீரைத் தமது நாட்டுக்கு எடுத்துச் செல்கிறார்கள்.

குறைந்த ஆழம் உள்ள பாலைவனத்தில் அமைந்துள்ள இந்தக் கிணறு, அருகில் ஏரிகளோ பள்ளத்தாக்குகளோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளம் குட்டைகளோ இல்லாத அந்தக் கிணற்றில் இருந்து எப்படி லட்சோப லட்சம் மக்களுக்கு தண்ணீர் வழங்கப்படுகிறது என்பது அற்புதம் தான். எந்த ஒரு நீர்நிலையாக இருந்தாலும் குறுகிய காலத்தில் பாசி படிந்து, கிருமிகள் உற்பத்தியாவது இயற்கை. ஆனால் ஸம்ஸம் தண்ணீரில் அது உற்பத்தியான காலம் முதல் இன்று வரை எந்த கிருமிகளோ, பாசிகளோ இன்றி தூய்மையாகவே உள்ளது. கல்ஸியம் மற்றும் மெக்னீஸியம் எனும் உப்பு மற்ற வகை தண்ணீரை விட ஸம்ஸம் தண்ணீரில் அதிகமாக உள்ளது. இந்த உப்புக்கள் புத்துணர்ச்சியைக் கொடுக்கக் கூடியவை. மேலும் இந்தத் தண்ணீரில் ஃபுளோரைடு உள்ளது. இது கிருமிகளை அழிக்க வல்லது.

நீரை ஒரு அருளாகத் தந்து அதிலும் ஸம்ஸம் நீரை அருள்களிலெல்லாம் அருளாகவும் இஸ்லாத்தின் ஒரு அத்தாட்சியாகவும் அல்லாஹ் அருளியுள்ளான், அல்ஹம்துலில்லாஹ்.

## இறுதி நாளில் வற்றிப் போகும் தண்ணீர்

இறைவன் அருளாகத் தந்திருக்கும் நீர் மறுமை நாள் நிகழும் தறுவாயில் வற்றிவிடும். கடல் பொங்கி, இரு கடல்களுக்கு மத்தியில் அல்லாஹ் இட்டிருக்கும் பர்ஸக் எனும் அணைகள் உடைந்து இறுதியில் கடல் தீ முட்டப்பட்டு வற்றி விடுவதாக திருமறை பகர்கிறது. "கடல்கள் தீ மூட்டப்படும் போது" 81:6 அதாவது நீர் தீப்பற்றி எறிவதாக அல்லாஹ் இவ்வசனத்தில் கூறுகிறான். அது எப்படி பற்றியெறியும்? என்று சிந்தித்தால் அதில் இருக்கும் விஞ்ஞான அற்புதத்தை எம்மால் விளங்க முடியும்.

நீர் என்பது இரண்டு ஒட்சிசன் அணுக்களினதும் ($O_2$) ஒரு ஐதரசன் அணுவினதும் (H) சேர்க்கையாகும். ஐதரசன் என்பது பற்றியெறியும் தன்மை கொண்டது. அதனுடன் ஒட்சிசனும் சேர்ந்தால் இன்னும் இன்னும் பற்றியெறியும். மறுமை நாள் நிகழும்போது அல்லாஹ் நீரின் இரு மூலக் கூறுகளையும் பிரிக்கின்றான். அப்போது ஐதரசன் எரிய அதனுடன் ஒட்சிசனும் சேர்ந்து எரிந்து இறுதியில் புவியில் உள்ள நீர் யாவும் முழுமையாக வற்றிவிடும்.

இறைவனின் அருளான நீரை வீண்விரயம் செய்யாது சிறந்த முறையில் பயன்படுத்துவோம்.

---

( 32ஆம் பக்கம் பார்க்க... )

b) சில மாதங்களின் பின்னர் வீட்டுச் செலவு அதிகரித்ததன் காரணமாக உணவு, கல்விக்கான விகிதம் 3:1 என மாற்றமடைந்தது.

i. உணவுக்காக அதிகரித்த செலவுத் தொகை.

ii. கல்விக்கு குறைவடைந்த தொகையினை முதலில் கல்விக்கு ஒதுக்கிய தொகையின் சதவீதமாக தருக.

c) அடுத்த மாதத்தில் அவர் அனுப்பும் தொகையினை 15% அதிகரித்தால் உணவுக்கான செலவு b இல் உள்ளவாறு அமைந்திருப்பின் உணவு, கல்விக்கான விகிதம் 15:8 ஆக மாறும் எனக் காட்டுக.

---

(29 ஆம் பக்கத் தொடர்)

இலக்கை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். தனியாகப் படிப்பதற்கு சோம்பல் எனில் நன்றாகப் படிக்கக்கூடிய உங்களுடைய வகுப்புத் தோழமைகளுடன் இணைந்து பாடங்களை மீட்டுவதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்து கொள்ளுங்கள். வார இறுதி நாட்களைப் பிரயோசனமாகக் கழிக்க இது துணை செய்யும், இன்ஷா அல்லாஹ்.

வாழ்க்கையில் உங்களுடைய கொள்கைக்கு முன்னால் ஒரு போராளியாக இருங்கள்! வாழ்க்கை என்பது கொள்கைகளும், போராட்டங்களும் நிறைந்ததே!

---

(03 ஆம் பக்கம் பார்க்க)

விட்டதை எப்படி அவர்கள் அறிந்திருக்க முடியும்! தண்டனை வர தாமதமாகிய போது தான் அல்லாஹ் அம்மக்களை மன்னித்து விட்டான் என்பதை உணர்ந்து கொண்டார்கள். அவர்களுக்கு கடும் கோபம் ஏற்பட்டது. கோபம் மனிதனுக்கு எப்போதும் பகைதான். கோபத்தில் எடுக்கும் தீர்மானம் பிழைத்துப் போகும். நிதானம், அல்லாஹ் விரும்புகின்ற உயர்ந்த பண்பு. நபி யூனுஸ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் நிதானமிழந்து கோபத்தோடு அவ்வூரை விட்டு வெளியேறினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தொகைப் பெயர்கள்



- இருசுடர்: சூரியன், சந்திரன்
- இருபொருள்: கல்வி, செல்வம்
- முக்கனி: மா, பலா, வாழை
- முத்தமிழ்: இயல், இசை, நாடகம்
- மூவேளை: காலை, பகல், இரவு
- நானிலம்: குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்
- ஐம்பொறி: மெய், வாய், கண், மூக்கு, செவி
- ஐம்புலன்கள்: உணர்தல், சுவைத்தல், பார்த்தல், நுகர்தல், கேட்டல்
- பஞ்சபாதகம்: கொலை, களவு, மது, சூது, காமம்
- பஞ்சாமிர்தம்: சர்க்கரை, தயிர், தேன், நெய், பால்
- அறுசுவை: இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, உறைப்பு, கசப்பு
- அறுபடுவம்: கார், கூதிர், முன்பனி, பின்பனி, முதுவேனில், இளவேனில்
- ஏழுஸ்வரங்கள்: ச, ரி, க, ம, ப, த, நி
- எண்டிசை: வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, வட கிழக்கு, தென் கிழக்கு, தென் மேற்கு, வட மேற்கு,

**எச்.எம். பாத்திமா**
**அல்ஹிலால்புர**

# பழமொழிகள்

- அழுத பிள்ளை பால் குடிக்கும்
- ஒரு கல்லில் இரண்டு மாங்காய்
- ஆழம் அறியாமல் காலை விடாதே
- கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை
- ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்
- பழகப் பழகப் பாலும் புளிக்கும்
- குரைக்கின்ற நாய் கடிக்காது
- ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது
- ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
- கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை?

**எம்.எஸ்.எம். ஸாமித்,**
**தரம்: 07**
**வே/மினு அல்ஹஸன் வித்தியாலயம்**
**வேவெல்தெனிய**

# சிந்தனைத் துளிகள்



- உன்னுடைய நோக்கம் தூய்மையானதென்றால் நீ கடல் மீதும் நடக்கலாம்.
- முறிந்த கையைக் கொண்டு உழைக்க முடியும்; உடைந்த உள்ளத்தைக் கொண்டு உழைக்க முடியாது.
- மனம் கடல் போன்றது; பகுத்தறிவு கூரிய கத்தி போன்றது.
- அகந்தையால் 'இல்லை' என்று சொல்லாதே! பலவீனத்தால் 'சரி' என்று சொல்லாதே!
- அமைதியான மனத்திற்குப் பார்ப்பதெல்லாம் விருந்து.
- நம்பிக்கை உறுதியாக நிற்கும் போது பிரார்த்தனை நீண்டதாக இருக்கத் தேவையில்லை.
- நம்பிக்கை எதையும் துணிந்து செய்கிறது; அன்பு எதையும் பொறுத்துக் கொள்கிறது.
- தீய சொற்கள் வெறும் நீர்க்குமிழிகள் ஆனால் நற்செயல்கள் தங்கத் துளிகள்.

**ஜே.எப். ரிஸ்னா**
**நிக/ நம்முவாவ மு.ம.வி**
**நம்முவாவ**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் அகரம்



## அறிவுக் களஞ்சியம்



- அமெரிக்காவிற்கு ஐக்கிய அமெரிக்க நாடு என்ற பெயர் இட்ட இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் யார்? **வின்ஸ்டன் சேர்ச்சில்**
- ஏற்ப்புவலியை உருவாக்கும் பற்றீரியா எது? **குலோஸ்திரிடியம் ரெற்றனி.**
- பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத் 2006 ஏப்ரல் 21ஆம் திகதி தனது எத்தனையாவது பிறந்த தினத்தை கொண்டாடி னார்? **80ஆவது பிறந்த தினம்**
- சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் தலைமை அலுவலகம் எந்த நகரத்தில் அமைந்துள்ளது? **வியன்னா நகரில்**
- 1919இல் சர்வதேச சங்கம் உருவாக்கப்பட்ட போது ஆரம்பத்தில் அங்கத்துவம் பெற்றிருந்த நாடுகள் எத்தனை? **42 நாடுகள்.**
- நிலக்கண்ணி வெடிகளைத் தடைசெய்யும் சர்வதேச ஒப்பந்தம் கனடாவில் கையெழுத்திடப் பட்ட ஆண்டு எது? **1997ஆம் ஆண்டு**
- உலகப் புகழ் பெற்ற ஓவியர் 'லியனாடோ டாவின்ஸி' எந்த நாட்டைச் சேர்ந்தவர்? **இத்தாலி**
- "கழுதையுடன் நட்பு வைத்துக் கொண்டால் உதைகள் எதிர்பார்க்க வேண்டியுள்ளதுதான்" இந்தப் பழமொழி எந்த நாட்டுடையது? **இந்தியா**
- ரம்புட்டான் எனும் சொல் 'ரம்புட்' எனும் சொல்லிருந்து மருவி வந்த ஒரு பெயராகும், 'ரம்புட்' என்பது எந்த மொழிச் சொல்? **மலாய் மொழி**
- மனித இனத்தின் இரண்டாவது தந்தை என அழைக்கப்படும் நபியின் பெயர் என்ன? **நபி நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள்**
- அதான் என்பதை நாம் 'பாங்கு' என்கிறோம், பாங்கு எனும் சொல் எந்த மொழிச் சொல்லாகும்? **பாரசீக மொழி**
- நபி மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் பெயர் புனித அல்குர்ஆனில் எத்தனை இடங்களில் வருகிறது? **70 இடங்களில்**
- ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டில் கஃபதுல்லாவை நாலாம் சுல்தான் முராத் என்பவர் புதுப்பித்துக் கட்டினார்? **ஹிஜ்ரி 1039ஆம் ஆண்டு**
- ஷஹீதாக்கப்பட்ட பின் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஜனாஸாத் தொழுகையை நடத்தியவர் யார்? **சுஹைப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள்**
- உலகில் முதன் முதலாக புகையிரதப் பாதை எந்த நாட்டில் அமைக்கப்பட்டது? **இங்கிலாந்து**
- உலகில் முதன் முதலாக சுதந்திர வர்த்தக வலயம் எத்தனையாம் ஆண்டில் அரம்பிக்கப்பட்டது? **1959ஆம் ஆண்டு**
- ஆசியாக் கண்டத்தில் முதன் முதலில் முத்திரையை வெளியிட்ட நாடு எது? **இந்தியா**
- இலங்கையின் பாடசாலைகளில் முதன் முதலில் சாரணர் இயக்கம் நிறுவப்பட்டது எத்தனையாம் ஆண்டிலாகும்? **1917ஆம் ஆண்டு**
- தத்துவங்களையும் ஆச்சரியங்களையும், வியப்பு அடையத்தக்க தகவல்களையும் உள்ளடக்கிய உலக வரைபடப் புத்தகம் முதன் முதலாக எத்தனையாம் ஆண்டில் வெளியிடப்பட்டது? **1963ஆம் ஆண்டு**

**ஸாகிர் அலி.**
**மானவல்லை,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் அகரம்



## நேரத்தின் பெறுமதி



- ஹஸனுல் பஸரி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

நீ நாட்களின் தொகுதியாவாய். உன்னை விட்டு ஒரு நாள் சென்றுவிட்டால் உன்னில் சில பகுதிகள் சென்று விட்டன.

மேலும் அவர் கூறினார்: சில மனிதர்கள் கூட்டம் இருத்தார்கள். அவர்கள் உங்களிடமுள்ள திர்ஹம்களை விடவும் தீனார்களை விடவும் அதிகமாக நேரத்தை நேசித்தார்கள்.

- உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரழியல்லாஹ் அன்ஹு) அவர்கள் கூறினார்கள்: இரவும் பகலும் உன்னில் தொழிற்படுகின்றன; நீ அவற்றில் தொழிற்படு.

- எனது ஆயுள் குறைந்து எனது நற்செயல்கள் அதிகரிக்கவில்லை என்று எண்ணி என்னைக் கடந்து சென்ற நாட்களில் கைசேதப்பட்டுள்ளேன் என அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

**(அல்முஜ்தமா), ஜே.ஐ. அப்துல்லாஹ், கல்முனை**

## ஜப்பானின் மட்சுமோட்டோ கோட்டை



**எம்.எச்.எம். சியாம்**
**வாழைச்சேனை**

இது ஜப்பானில் உள்ள கோட்டைகளில் மிகவும் அழகாகவும் சிறந்த முறையிலும் வடிவமைக்கப்பட்டுள்ள பழைமையான கோட்டையாகக் கருதப்படுகின்றது. இதனை 'ஹிராஜியோ' என்றும் அழைப்பர். சமவெளிப் பகுதியில் அமைப்பக்கப்பட்டுள்ள கோட்டைகளுள் 'மட்சு மோட்டோ' கோட்டை சிறந்ததாகும். இந்தக் கோட்டை முதலில் சிறியதாகவே அமைக்கப்பட்டது. 1592 முதல் 1614 வரையான காலப்பகுதியில் இரண்டாவது தொகுதி இதனுடன் சேர்க்கப்பட்டது. இக்காலப் பகுதியில் நாட்டில் நிலவிய போர்ச் சூழல் காரணமாக நிர்மாணப் பணிகள் மிகவும் மந்தகதியிலேயே நடைபெற்றன. 1635இல் போர் நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் சந்திரனை அவதானிப்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட பாரிய மூன்றாவது தொகுதியும் இக்கோட்டையுடன் இணைக்கப்பட்டது.

## அரபுப் பழமொழிகள்

**ஆஸ் அகமட்**
**நாவலடி**

- காலையின் ஒரு பிடி உணவு ஆயிரம் மருந்துகளை விடச் சிறந்தது.
- அறிவில் சிறந்தது சமயோசித அறிவாகும். செயலில் சிறந்தது நிலைமையைப் பாதுகாப்பதாகும்.
- எத்தனையோ சைக்கினைகள் வார்த்தைகளை விட மிகவும் தாக்கம் செலுத்தக்கூடியவை.
- உங்களிடம் ஒரு விடயத்தை கொண்டு வருபவர் மற்றவர்களிடம் உங்களைப் பற்றியும் கொண்டு செல்வார்.
- அறிவிலிக்குப் பதில் சொல்லாமலிருப்பதே அவனுக்கு பதிலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## யானை பற்றிய சில தகவல்கள்



- யானையில் மூன்று சிற்றினங்கள் உள்ளன.
- யானைக்கு 6 தடவைகள் பல் விழுந்து முளைக்கும்.
- இதனது மூளை 5 கிலோகிராம் ஆகும்.
- இதன் தந்தம் மூன்று மீற்றர் (10 அடி) நீளமுடையது.
- பெண் யானையின் கர்ப்ப காலம் 22 மாதங்கள்.
- இதன் ஆயுட்காலம் 70 ஆண்டுகளாகும்.
- யானைகள் கூட்டமாகச் செல்லும் போது பெண் யானைதான் கூட்டதிற்குத் தலைமை தாங்கிச் செல்லும்.
- இவை ஒரு நாளைக்கு 16 மணித்தியாலங்கள் உணவு சேகரிப்பதில் செலவிடுகின்றன.
- யானையின் அறிவியல் பெயரானது 'எலிஃவாஸ் போக்கியஸ்' ஆகும்
- இவை ஒரு நாளைக்கு 140 கிலோ முதல் 270 கிலோ வரை உணவினை உட்கொள்கின்றன.

எம்.எச்.எம். நிஜாம்
வாழைச்சேனை

## ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற இடங்கள்




| ஆண்டு | நடைபெற்ற இடம் |
|---|---|
| 1896 | ஏதென்ஸ் |
| 1900 | பரிஸ் |
| 1904 | சென் லுயிஸ் |
| 1908 | லண்டன் |
| 1912 | ஸ்டொக்ஹோம் |
| 1916 | பேர்லின் |
| 1920 | அன்ட்வெப் |
| 1924 | பரிஸ் |
| 1928 | அம்ஸ்டர்டாம் |
| 1932 | லொஸ் ஏன்ஜல்ஸ் |
| 1936 | பேர்லின் |
| 1940 | டோக்கியோ |
| 1944 | லண்டன் |
| 1948 | லண்டன் |
| 1952 | ஹெல்சிங்கி |
| 1956 | ஸ்டொக்ஹோம்/மெல்போர்ன் |
| 1960 | ரோம் |
| 1964 | டோக்கியோ |
| 1968 | மெக்ஸிகோ |
| 1972 | மியூனிச் |
| 1976 | மொன்றியல் |
| 1980 | மொஸ்கோ |
| 1984 | லொஸ் ஏஞ்சல்ஸ் |
| 1988 | சியோல் |
| 1992 | பர்சிலோனா |
| 1996 | அட்லாண்டா |
| 2000 | சிட்னி |
| 2004 | ஏதென்ஸ் |
| 2008 | பீஜிங் |
| 2012 | லண்டன் |

எம்.எச்.எம். ஹஸ்மின்
தரம்: 11
மடிகே மு.ம.வி.
இப்பாகமுவ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அன்றாட வாழ்வில் اللغة العربية

# அரபு மொழி

தொடர்:

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி)

ஜுலை மாத இதழின் தொடர்....

## முறைசாரா பன்மை جَمْعُ التَّكْسِيْرُ

### أَفْعِلَةٌ

| | | |
|---|---|---|
| سُؤَالٌ – أَسْئِلَةٌ | —— | வினா |
| جَوَابٌ – أَجْوِبَةٌ | —— | விடை |
| طَعَامٌ – أَطْعِمَةٌ | —— | உணவு |

### أَفْعُلٌ

| | | |
|---|---|---|
| شَهْرٌ – أَشْهُرٌ | —— | மாதம் |
| رَجُلٌ – أَرْجُلَةٌ | —— | கால் |
| ذِرَاءٌ – أَذْرُعٌ | —— | முழம் |
| نَفْسٌ – أَنْفُسٌ | —— | ஆத்மா |

### فُعْلاَنٌ

| | | |
|---|---|---|
| قَمِيْصٌ – قُمْصَانٌ | —— | சட்டை |
| بَلَدٌ – بُلْدَانٌ | —— | நாடு |

### مَفَاعِيْلُ

| | | |
|---|---|---|
| مِفْتَاحٌ – مَفَاتِيْحُ | —— | திறப்பு |
| مِنْدِيْلٌ – مَنَادِيْلُ | —— | கைக்குட்டை |
| صُنْدُوْقٌ – صَنَادِيْقُ | —— | பெட்டி |
| كُرْسِيٌّ – كَرَاسِي | —— | கதிரை |

### مَفَاعِلُ

| | | |
|---|---|---|
| دَفْتَرٌ – دَفَاتِرُ | —— | அப்பியாசப் புத்தகம் |
| مَكْتَبٌ – مَكَاتِبُ | —— | மேசை |
| فُنْدُوْقٌ – فَنَادِقُ | —— | ஹோட்டல் |
| مَلْبَسٌ – مَلاَبِسُ | —— | ஆடை |
| مَدْرَسَةٌ – مَدَارِسُ | —— | பாடசாலை |
| مَصْنَعٌ – مَصَانِعُ | —— | தொழிற்சாலை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# لاَ شَكَّ أَنَّ

இன்றைய பாடத்தில் அறபு மொழிப் பிரயோகம் ஒன்றினைப் பயன்படுத்தும் முறை பற்றி நோக்குவோம்.

1. اَلْقِرَاءَةُ مُفِيْدَةٌ

வாசிப்பு பயன்மிக்கதாகும்.

إِنَّ الْقِرَاءَةَ مُفِيْدَةٌ

நிச்சயமாக வாசிப்பு பயன்மிக்கதாகும்.

لاَ شَكَّ أَنَّ الْقِرَاءَةَ مُفِيْدَةٌ

வாசிப்பு பயன்மிக்கது என்பதில் சந்தேகமே இல்லை.

2. الدَّرْسُ سَهْلٌ

பாடம் இலகுவானது.

إِنَّ الدَّرْسَ سَهْلٌ

நிச்சயமாக பாடம் இலகுவானது.

لاَ شَكَّ أَنَّ الدَّرْسَ سَهْلٌ

பாடம் இலகுவானது என்பதில் ஐயமே இல்லை.

3. السُّوْقُ مُزْدَحِمَةٌ

சந்தை சனத்திரள் கொண்டது.

لاَ شَكَّ أَنَّ السُّوْقَ مُزْدَحِمَةٌ

சந்தை சனத்திரள்மிக்கது என்பதில் ஐயமே இல்லை.

النِّيْلُ أَطْوَلُ نَهْرٍ فِيْ العَالَمِ

நைல் நதி உலகில் மிக நீண்ட நதியாகும்.

لاَ شَكَّ أَنَّ النِّيْلَ أَطْوَلُ نَهْرٍ فِيْ العَالَمِ

நைல் நதி உலகில் மிக நீண்ட நதி என்பதில் ஐயமே இல்லை.

மேற்படி உதாரணங்களை நோக்கும் போது لاَ شَكَّ என்ற அறபு மொழிப்பிரயோகத்துடன் المُبْتَدَأُ والخَبَرُ வசனத்தினை இணைத்திருப்பதனை அவதானிக்க முடியும். அவ்வாறு இணைக்கும் போது أَنَّ என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

4. الأُمَّةُ المُسْلِمَةُ أُمَةٌ وَاحِدَةٌ

முஸ்லிம் உம்மத் ஒரே உம்மத் (சமூகம்)

لاَ شَكَّ أَنَّ الأُمَّةَ المُسْلِمَةَ أُمَةٌ وَاحِدَةٌ

முஸ்லிம் உம்மத் ஒரே உம்மத் (சமூகம்) என்பதில் ஐயமே இல்லை.

5. لاَ شَكَّ أَنَّ صَدِيْقِيْ سَيَنْجَحُ فِيْ الإِمْتِحَانِ

எனது நண்பன் பரீட்சையில் சித்தியடைவான் என்பதில் ஐயமே இல்லை.

المُبْتَدَأُ والخَبَرُ வசனங்களில் இவ் அறபு மொழிப் பிரயோகத்தைப் பயன்படுத்தும் முறை பற்றி நோக்கினோம்.

لاَ شَكَّ என்ற அறபு மொழிப்பிரயோகத்தினை فِعْلُ فَاعِلُ வசனங்களில் பயன்படுத்தும் தேவை ஏற்படின் அதாவது பரீட்சையின் போது அல்லது வீட்டு வேலையாகவே, வழங்கப்பட்டால் அவற்றை எவ்வாறு மிகச் சரியான வாக்கியங்களாக மாற்றி அமைக்கும் முறையையும் விளங்கிக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Assalamualaikum dear friends !

# "How much do you know?"

Do you know Pinocchio? Yes, he is the guy who had a growing nose. His nose would grow long when he lies. Funny, isn't it? But friends, I have to say you some thing. Telling lies is not a funny thing **AT ALL.**

Itis a great sin! WE KNOW IT. But why do we repeatedly lie? I can hear some one saying "I never lie". So shall we check it? Who is ready for the test? Look at these incidents and say how will you react.



1. Your Mother asks "Who ate up all the pudding in the fridge?" If you are the one,......?
2. Your teacher asks you not to copy in the exam.........?
3. Your class mate asks you before the exam. "Did you study?" "You have studied very well"..........?
4. Father asks "Did you get wet in the rain?"............?



If you are a boy/girl who always say the truth for these questions, then MashaAllah! May Allah help you to be truthful forever. If not **YOU ARE IN DANGER.**

**Lying can take you to HELL. Naoothu billah.**
So friends, let's speak the truth all the time.
Here is an activity for you. Just try it.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Fill in the blanks with the correct words.**

1. My mother ................................................ (buy) me a blue umbrella for the rainy season
2. Asna ................................................ (be) smart and good girl.
3. This month ................................................ (begin) with a holiday.
4. Are you ................................................ (join) us in the trip to Galle?
5. Elephants are big animals but they ...................................... (be) not bigger than blue whales.

**Answers**

(Bought, is , begins, joining, are)




# How to study English effectively?



There are many ways to study English, but many students ask which is the most effective. Unfortunately, I don't think there is a single answer that is right for every student. However, I can certainly give some helpful guidelines.

Warming-up to study English

Just as there are exercises to help you warm up before you play some basket ball or other sport, there are exercises which can help you warm up to study English. Here are some simple exercises to help you warm up.

Study English. I. Activate your vocabulary

Activate your vocabulary by thinking or speaking briefly about the subject you are about to work on . For example, if you are going to study English on topics that focuses on vacations, take a moment to think about your last vacation, what you did, what you enjoyed etc. This simple exercise will help your brain warm up to vocabulary that you are likely to encounter as you study.

Study English II. Activate your grammar.

Activate your grammar by thinking about general grammar area before you begin to study. For example , if you are going to study on past tenses, stop to think what you did last week , where you went etc. This will help you in making an easy way before you focus on grammar.

**To be continued..**

**Mohamed Arshad**
**Hemmathagama**
**Islahiya Arabic college**

## When my mother is at home

I am very happy when my mother is at home. Normally mothers cherish, sustain, educate and train children. The upbringing of a child rests in the shoulder of a mother. I get all my work done with the help and assistance of my mother when she is at home. I have a deep love for my mother, because she teaches me my school lessons and helps me in my home work. When she is at home I find all the pleasures of the world in her lap.

She will undergo all sorts of sufferings for me when she is at home. When I feel sick she

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

takes me to hospital. When I am hungry she feeds me, she arranges for me all my school items. Irons my uniform, arranges my Tiffin etc. Apart from all these, her love is greater and cannot be obtained or enjoyed through anyone else.

**"Mother's lap is school for children"**



**Aamina Mubarak, Grade 11**
**St.Andrew's B.M.V**
**Nawalapitiya**




- English is called - business language
- Tamil is called- Pious language
- Italy is called - music language
- Greek is called- logical language
- Urdu is called - poetry language

**K.M.Atheef, Grade-08**
**B/Al-Ilma Muslim Vidyalaya**
**Guruthalawa**

# Tigers



Tigers are the biggest of the big cats. They are found in many countries. There are many types of tigers such as Bengal tiger, Javan tiger, Caspian tiger , Siberian tiger and Sumatran tiger. The largest is the Siberian tiger, while the smallest is Sumatran tiger. Some tigers carry a gene which carries white fur and brown stripes. Tigers have good hearing and night vision. Adult tigers are solitary animals. . Tigresses and their cubs live together until adulthood. Each tiger has a special pattern of stripes which slightly differs from each other. Tigers are good swimmers. Tiger attacks on humans have also been reported. Most of these man-eaters have broken teeth. Tigers come into human villages because of habitat loss. They live up to 15-18 years. Tiger is an endangered species and we should protect it.

**Razmi, Rimzy and Nusky, 09-B.**
**English Medium/Tamil Medium**
**Welimada Muslim Maha Vidyalaya**

I'm eagerly waiting for your contributions with comments, stories poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

I learn every day

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

# வரலாறு



கலாநிதி கே.எம்.எம். இக்பால்

## தரம் 10

1. கைத்தொழில் புரட்சி ஆரம்பத்தில் 3 துறைகளில் ஏற்பட்டது. அம்மூன்று துறைகளையும் தருக. (3 புள்ளிகள்)
2. கைத்தொழில் புரட்சி இங்கிலாந்தில் ஆரம்பத்தில் ஏற்பட்டமைக்கான காரணங்கள் 4 தருக. (4 புள்ளிகள்)
3. கைத்தொழில் புரட்சியால் ஏற்பட்ட 2 நன்மைகளை விளக்குக. (5 புள்ளிகள்)
4. கைத்தொழில் புரட்சியால் ஏற்பட்ட 2 தீமைகளை விளக்குக. (6 புள்ளிகள்)

**விடை**

1. புடைவைக் கைத்தொழில், நிலக்கரித் தொழில், இரும்புருக்குத் தொழில்
2. i. மறுமலர்ச்சி காரணமாக பல கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டமை.
   ii. வேலியடைப்புத்திட்டம் காரணமாக பல தொழிலாளர்கள் கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு வந்தமை.
   iii. குடியேற்ற நாடுகளிலிருந்து இங்கிலாந்துக்கு அதிகமான மூலப்பொருட்கள் கிடைத்தமை.
   iv. உற்பத்திப் பொருட்களை பல நாடுகளுக்கும் கொண்டு செல்வதற்கு இங்கிலாந்திடம் சிறந்த கப்பல் போக்குவரத்து இருந்தமை.
3. **சர்வதேச வர்த்தகம் வளர்ச்சியடைந்தமை**

கைத்தொழில் புரட்சிக்கு முன்பு கைகளால் சில பொருட்களே உற்பத்தி செய்யப்பட்டன. இதனால் சர்வதேச வர்த்தகம் சிறிய அளவிலேயே இடம்பெற்றது. கைத்தொழிற் புரட்சியின் பின்பு தொழிற்சாலைகளில் பெருந்தொகையான பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. பிரித்தானியா, பிரான்ஸ், இத்தாலி முதலிய நாடுகள் கைத்தொழிற் பொருட்களை பெருந்தொகையாக ஏற்றுமதி செய்தன. இந்தியா, இலங்கை, சிம்பாப்பே முதலிய குடியேற்ற நாடுகள் மூலப்பொருட்களை ஏற்றுமதி செய்தன. இதனால் சர்வதேச வர்த்தகம் மிகவேகமாக வளர்ச்சியடைந்தது. இச்சர்வதேச வர்த்தகத்தில் மூலப்பொருட்களை ஏற்றுமதி செய்த ஆசிய-ஆபிரிக்க நாடுகள் குறைவான வருமானத்தையும் முடிவுப்பொருட்களை ஏற்றுமதி செய்த ஐரோப்பிய நாடுகள் அதிக வருமானத்தையும் பெற்றுக்கொண்டன.

**மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தமை**

கைத்தொழில் புரட்சியின் காரணமாக மக்களின் வாழ்க்கைத்தரம் முன்னேற்றமடைந்தது. கைத்தொழில் புரட்சிக்கு முன்பு மக்களின் போக்குவரத்தும், பொழுதுபோக்கும், தொடர்பாடலும் கடினமானவையாகக் காணப்பட்டன. இப் புரட்சியினால் பல கருவிகளும் பல போக்குவரத்து சாதனங்களும் உற்பத்தி செய்யப்பட்டன. இதனால், மக்களது வாழ்க்கை இலகுவானதாக மாறியது. மக்கள் விரைவாக ஒரிடத்திலிருந்து மற்றுமோர் இடத்திற்குச் சென்றார்கள். உதாரணமாக: வானொலியை இத்தாலி நாட்டைச் சேர்ந்த மார்க்கோனி என்பவர் 1895இல் கண்டு பிடித்தார். அதைத் தொடர்ந்து வானொலி உற்பத்தி அதிகரித்தது. இதனால் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தது.

4. **வர்க்க முரண்பாடு அதிகரித்தமை**

சமூகத்தில் முதலாளி-தொழிலாளி என்ற வர்க்க வேறுபாடு கைத்தொழில் புரட்சியின் பின்பே உலகில் அதிகரித்தது. பணம் படைத்தவர்கள் தொழிற்சாலைகளை அமைத்து முதலாளிகளாக மாறினர். ஏனையோர் தொழிலாளர்களாக அத்தொழிற்சாலைகளில் பணிபுரிந்தனர். முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான பொருளாதார, சமூக இடைவெளிகள் அதிகரித்தன. தொழிற்சாலைகளில் இருந்து கிடைத்த வருமானத்தின் பெரும்பகுதி முதலாளிகளுக்கே சென்றது. தொழிலாளருக்கு குறைந்த வேதனமே கிடைத்தது. அவர்களின் வாழ்க்கைநிலை மோசமடைந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வர்க்க முரண்பாட்டை கார்ள் மாக்ஸ் தனது 'டாஸ் கெபிடல்' என்ற நூலில் வன்மையாகக் கண்டித்தார்.

சூழல் பாதிக்கப்பட்டமை

கைத்தொழில் புரட்சி தோன்றுவதற்கு முன்பு உலகில் சூழல் பிரச்சினைகள் பெரிதாக இருக்க வில்லை. கைத்தொழில் புரட்சியினால் ஏற்படுத் தப்பட்ட தொழிற்சாலைகள் சூழலைப் பாதிப்பதில் பெரும்பங்கை வகித்தன. கைத்தொழிற்சாலைகளி லிருந்து வெளியேறும் தொழிற்சாலைப் புகை வளியை மாசடையவைத்தது. ஆலைக் கழிவுநீர், நீரை மாசடைய வைத்தது. கைத்தொழிற் சாலைத் திண்மக் கழிவுகள் நிலத்தை மாசடைய வைத்தது. இன்று உலகில் சூழல் மோசமாகப் பாதிக்கப்பட் டமைக்கு கைத்தொழில் புரட்சியே மிக முக்கிய காரணமாகும். இலங்கையில் 1883இல் சூழல் பாதுகாப்பு சட்டம் உருவாக்கப்பட்டமைக்கும் 1992இல் றியோடி ஜெனீரோ நகரில் சூழல் மாநாடு நடைபெற்றமைக்கும் கைத்தொழில் புரட்சியின் விளைவுகளே காரணங்களாகும்.

## தரம் 11

**பொருத்தமான விடையின் கீழ் அடை யாளமிடுக.**

1. A. அதிக பாதுகாப்புச் செலவு

   B. சந்தைப் பொருளாதாரம் வளர்ச்சிய டைந்தமை

   C. உற்பத்தியில் நவீன நுட்பங்கள் பயன்ப டுத்தப்பட்டமை

   D. போட்டி அடிப்படையில் உற்பத்தி நடைபெறாமை.

   இவற்றுள் சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சிக்கு வழிவகுத்த காரணிகள்.

   i. AB　　ii. BC
   iii. AD　　iv. AC

2. ஜப்பானின் வெளிநாட்டுத் தொடர்பில் அதிக தாக்கத்தை செலுத்தியது.

   i. 2ம் உலக மகா யுத்தத்தில் பங்குபற்றியமை

   ii. 1951இல் ஜே.ஆர். ஜெயவர்த்தன நிகழ்த் திய உரை

   iii. 1955இல் ஜப்பானிய பிரதமரின் விஜயங்கள்

   iv. 1947இல் புதிய யாப்பு ஏற்படுத்தப்பட் டமை

3. பெல்கிரேட்டிலும், கொழும்பிலும், நடை பெற்ற அணிசேரா இயக்க மாநாட்டின் ஆண்டுகள் முறையே.

   i. 1961, 1976　　ii. 1976, 1961
   iii. 1975, 1977　　iv. 1975, 1980

4. 1962இல் ஐக்கிய அமெரிக்காவைத் தாக்கக்கூடிய விதத்தில் எந்த நாட்டில் ரஷ்யா ஏவுகணையைப் பொருத்தியது?

   i. துருக்கி　　ii. இஸ்ரேல்
   iii. வடகொரியா　　iv. கியூபா

5. பின்வரும் தலைவர்களுள் அணிசேரா இயக் கத்துடன் தொடர்பில்லாத ஒரு தலைவர்.

   i. வின்ஸ்டன் சேர்ச்சில்

   ii. அப்துல் நாசர்

   iii. ஜவகர்லால் நேரு

   iv. SWRD. பண்டார நாயக்கா

6. நேட்டோ அமைப்பில் இடம்பெறாத ஒரு நாடு.

   i. பிரித்தானியா　　ii. கனடா
   iii. போலந்து　　iv. பெல்ஜியம்

7. நிரல் 1 உடன் நிரல் 2ஐ இணைக்கும் போது அமையும் சரியான விடை.

   1. இரத்மலான தர்மாலோக தேரர்
   2. வலானே சித்தார்த்த தேரர்
   3. மிகெட்டுவத்த குணானந்த தேரர்
   4. சுமங்கள தேரர்

   A வித்யோதய பிரிவெனா

   B வித்தியாலங்கார பிரிவெனா

   C இரத்மலான பரம தம்மவிகாரை

   D ஐம்பெரும் விவாதம்

   i. ABDC　　ii. CBDA
   iii. BCAD　　iv. BCDA

8. A பிரம்மஞான சங்கம்

   B சரசவி சந்தரெச பத்திரிகை

   C தர்மராஜ கல்லூரி

   D மகாபோதி சங்கம்

   இவற்றுள் ஹென்றி ஸ்டில் ஒல்கொட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவருடன் தொடர்பற்ற ஒரு விடயம்.

i. A ii. B
iii. C iv. D

A வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டமை

B செனற்சபை

C ஆளுநர் நாயகம்

D அரசுக் கழகம்

E நிருவாகக்குழு

**09.** மேற்குறிப்பிட்ட விடயங்களுள் டொனமூர் யாப்பில் இடம்பெற்ற விடயங்கள்.

i. BC ii. DE
iii. AB iv. AC

**10.** சோல்பெரி யாப்பில் இடம் பெற்ற அம்சங் கள்.

i. AB ii. DC
iii. BD iv. BC

**படத்தில் இருப்பவரை அவதானித்து பின் வரும் வினாக்களுக்கு விடை தருக,**



**11.** படத்தில் இருப்பவரின் பெயர்.

**12.** அவர் ஆரம்பித்த கட்சி.

**13.** அவர் ஆரம்பித்த நீர்பாசனத் திட்டம்.

**14.** அவர் பிரதமராகிய ஆண்டு.

**15.** இலங்கை தேசிய சங்கத்தின் முதலாவது தலை வர்.

i. சேர். பொன். அருணாசலம்

ii. D.S. சேனநாயக்கா

iii. A.E. குணசிங்க

iv. N.M. பெரேரா

**16.** ஞானதீபம் பத்திரிகையை ஆரம்பித்தவர்.

i. ஆறுமுக நாவலர் ii. T.B ஜாயா

iii. அறிஞர் சித்திலெப்பே iv. இராமநாதன்

**17.** உலக அபிமானி என அழைக்கப்பட்டவர்.

i. பாலகங்காதர திலகர்

ii. தடாபாய் நபரோகி

iii. முகம்மதலி ஜின்னா

iv. சுபாஸ் சந்திரபோஸ்

**18.** மேஜிஜி புதிய யாப்பு அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு.

i. 1889 ii. 1899
iii. 1902 iv. 1915

**19.** சீனாவில் மன்-சூ அரச வம்சம் அதிகாரத்தை இழந்த ஆண்டு.

i. 1910 ii. 1911
iii. 1912 iv. 1913

**20.** சீன கொம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு.

i. 1920 ii. 1921
iii. 1922 iv. 1923

**விடைகள்**

1. iii
2. ii
3. i
4. iv
5. i
6. iii
7. iv
8. iv
9. ii
10. i
11. D.S. சேனநாயக்கா
12. ஐக்கிய தேசியக் கட்சி
13. கல்லோயா
14. 1947
15. i
16. iii
17. i
18. i
19. ii
20. ii



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உச்ச இலக்கை அடைய துறைசார் நிபுணத்துவம்



ஜே.எம். அஸீம் (நளீமி)
www.azeemzain.org

உங்களிடம் உங்கள் இலட்சியத்தைக் கேட்டால் உடனே நீங்கள் சொல்லி விடக்கூடும். ஆனால், உங்கள் துறையில் உங்கள் இலட்சியத்தை துல்லியமாக அறிய மேலும் கேள்வி கேட்டால் தட்டுத்தடுமாறக்கூடும். நீங்கள் உங்கள் துறையில் மிகத் தேர்ச்சி பெற்ற நிபுணராக இருக்க வேண்டும். உங்கள் துறையில் உங்களை முந்த எவரும் இல்லை என்ற நிலையை அடைய வேண்டும்.

உமர் (ரழியல்லாஹுு அன்ஹுு) அவர்களின் துறைசார் நிபுணத்துவம் அவர்களுக்கு விரிந்த சாம்ராஜ்யத்தைக் கொடுத்தது. அல்பிரூனி, இப்னு ஸீனா போன்ற விஞ்ஞானிகளின் துறைசார் நிபுணத்துவம் அவர்களுக்கு அறிவியல் உலகில் அழியாத இடத்தை ஈட்டிக் கொடுத்தது.

இது போன்று உங்களிடமும் துறைசார் நிபுணத்துவம் நிறைந்திருக்க வேண்டும். துறைசார் நிபுணத்துவத்தை நாம் குழப்பிக் கொள்ளக் கூடாது. தனக்கு அனைத்தும் தெரிந்திருப்பதுதான் நிபுணத்துவம் என பலர் நினைக்கின்றனர்.

தனது துறையில் தனக்கு என்ன என்ன தேவை, தேவையானதை எங்கிருந்து பெறலாம் என்பதனை அறிந்திருப்பது அவசியம்.

நீங்கள் சிலரைக் கண்டிருப்பீர்கள். அவர்களிடம் கணினி தொடர்பாக எந்தக் கேள்வியைக் கேட்டாலும் சடாரென பதிலளித்து விடுவார்கள். எப்போது பார்த்தாலும் அவர்களிடம் அதுதான் பேச்சாக இருக்கும்.

இன்னும் சிலரிடம் கணிதம் தொடர்பாக எதைக் கேட்டாலும் மளமளவென பதிலளிப்பர். வேறு சிலர் பொது அறிவு தொடர்பாக எந்தக் கேள்வி கேட்டாலும் சட்டென பதிலளிப்பர். இது துறைசார் நிபுணத்துவம் அல்ல துறைசார் ஈடுபாடு. அவருக்கு குறிப்பிட்ட துறையில் உள்ள ஈடுபாடு. இந்த ஈடுபாடே துறைசார் நிபுணத்துவத்தை அளிக்கவல்லது.

இந்த நிபுணர்களிடமே உலகம் ஆலோசனைகளை வேண்டி நிற்கின்றது. அவர்களின் அறிவும் அனுபவமும் சேர்ந்து உலகிற்கான புதிய பாதையை வரைகின்றன. இவர்களின் ஆற்றல்களால் மற்றவர்களுக்கு பயன் கிடைக்கிறது.

Economic Specialist, Eco Specialist, Environmental Specialist என துறைசார் நிபுணத்துவத்தின் பட்டியல் நீண்டது. இதில் நீங்களும் ஒருவராக இணைந்து கொள்ளலாம். பொதுவாக நாம் இத்துறைசார் நிபுணத்துவத்தில் கவனம் செலுத்துவதில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் துறையில் நிபுணராயிருப்பதற்கு நீங்கள் இப்போதிலிருந்தே பழகிக் கொள்ளுங்கள். அதற்கு முதலில் உங்களுக்கு விருப்பமான துறையைத் தேர்ந்தெடுங்கள்.

உங்களை நீங்கள் எந்தளவுக்கு வளர்க்க விரும்புகிறீர்களோ அந்தளவுக்கு வளர்ந்து விடுவீர்கள்.

### உங்கள் துறையைக் காட்டித்தரும் திருப்புமுனை

நீங்கள் யார் என்பதையும் உங்களது மனம் எதில் லயிக்கிறது என்பதையும் அவதானித்துப் பாருங்கள். அது எதுவாயிருந்தாலும் அந்தத் துறையில் உங்களை ஈடுபடுத்திப் பாருங்கள். மிக வேகமாக அத்துறையில் பயணிப்பீர்கள். தடைகளைத் தகர்த்தெறிவீர்கள். சோர்ந்து போகமாட்டீர்கள். நம்பிக்கையிழக்க மாட்டீர்கள். ஏனெனில், உங்கள் இயல்பு அந்தத் துறையில் லயித்திருப்பதாகும். வெற்றி, தோல்வி என உங்கள் போராட்டம் தொடரும்.

சிலபோது அதுவல்ல உங்கள் துறை என்பதையும் வேறொன்றில் உங்கள் மனம் பல மடங்கு லயிப்பதையும் அவதானித்தால் அதில் ஈடுபடலாம். மாறாக, உங்கள் சின்னச் சின்ன ஆசைக்காக அதில் ஈடுபடாதீர்கள்.

வாழ்க்கையில் சிலர் முன்னேறுவதற்கும் பலர் முன்னேறாததற்கும் அவர்கள் விரும்பிய துறையைத் தெரிவு செய்வதும் தெரிவு செய்யாததுமே காரணம். பலரை நாம் காண்கிறோம். கல்வி வாழ்க்கை முடிந்ததும் தொழிலுக்காக ஏதோ செய்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற அவர்கள் நம்பிக்கையிழந்து ஏதோ உழைப்பதற்காக வாழ்கின்றனர்.

தான் விரும்பிய துறையைத் தெரிவு செய்து அந்தத் துறையில் பயணிப்பவர்கள் வாழ்வில் ஜெயிக்கிறார்கள், சாதிக்கிறார்கள். அவர்கள் தான் சாதனையாளர்கள். பிறந்தோம் வாழ்வோம் என வாழ்பவர்கள் தோற்றுப் போகிறார்கள்.

இப்படி திருப்புமுனை கிடைத்தவர்கள் பலர். அவர்களது திருப்புமுனைக்குக் காரணம் பல. அவர்களை அவர்களே அறியாதபோது வேறொருவர் அவரை அவருக்கு இனங்காட்டிக் கொடுத்திருப்பார். அல்லது சில நிகழ்வுகள் அவருக்கு அவரது பாதை யைக் காட்டிக் கொடுத்திருக்கும். எப்படியோ திருப்பமுனை கிடைத்ததும் அவர்களது வாழ்க்கைப் போக்கே மாறிவிடும்.

### உங்களுக்கும் அப்படி ஒரு திருப்புமுனை கிடைத்தால்....

நெப்போலியன் ஹில் என்பவருக்கு வாழ்க்கையில் அப்படி ஒரு திருப்புமுனை கிடைத்தது. டேல் கார்னகியை சந்தித்த போதே தனக்கு அவ்வாறான ஒரு திருப்புமுனை கிடைத்ததாக அவர் குறிப்பிடுகிறார். உலகில் சாதித்தவர்களின் வரலாற்றை ஆய்வு செய்தால் சாதனை விதிகளைக் கண்டுபிடிக்கலாம் என்ற விடயம் நெப்போலியன் ஹில் என்பவரை 25 வருட காலம் பயணிக்க வைத்து பல ஆயிரக்கணக்கான சாதனையாளர்களை சந்தித்து அவர்களுடைய வாழ்க்கையை ஆராய வைத்தது. இறுதியில் நெப்போலியன் ஹில் தான் கண்டுபிடித்த கோட்பாடுகளை வைத்து Think and Grow Rich என்ற நூலை எழுதினார். அது பல மொழிகளில் ஒரு கோடிப் பிரதிகள் விற்பனையாகியது.

### துறைசார் நிபுணத்துவம் புதுமைகளைப் படைக்கச் செய்யும்

Amazon நிறுவனத்தின் ஸ்தாபகர் ஜெப் பொசோஸ் தொழிநுட்ப உலகில் நீண்ட அனுபவம் கொண்டவர். கல்வியோடும் கற்றலோடும் ஈடுபாடு கொண்டவர். ஒரு வகையில் சொன்னால் அமேசன் ஒரு நூற்களஞ்சியம் போலவே காட்சியளிக்கிறது. புத்தகங்களுக்கு அமேசனில் தனியிடம் உண்டு. e-reader, kindlefire, e-books என பல புரட்சிகர மாற்றங்களைத் தொழிநுட்ப உலகிலும், கல்வி உலகிலும் கொண்டு வந்தவர். அவரது துறைசார் நிபுணத்துவம் அவரை புதுமைகள் படைக்கச் செய்கிறது. அண்மையில் அமேசன் 80 வருட அனுபவம் கொண்ட வோஷிங்டன் போஸ்ட் என்ற பத்திரிகை நிறுவனத்தைக் கொள்வனவு செய்தது. இப்போது பலரும் வோஷிங்டன் போஸ்ட்டில் என்ன புதுமைகளும் மாற்றங்களும் வரும் என்று தான் பலரும் எதிர்பார்க்கின்றனர்.

துறைசார் விற்பன்னர்களின் பண்புகளுள் இதுவும் ஒன்று. அவர்களின் துறையில் அவர்கள் புதுமைகள் படைப்பர். காத்திரமான மாற்றங்கள் நிகழும். அனைவருமே ஏதோ மாற்றம் வரப்போகின்றது என்ற எதிர்பார்ப்போடு இருப்பர். ஸ்டீவ் ஜொப்ஸ் தொழிநுட்ப உலகைக் கலக்கியபோது புதிதாக என்ன மாற்றம் வரும் என்றுதான் அனைவரும் ஏங்கிக் கிடந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கலந்துரையாடலின்போது ஒருவர் சொன்னார், புதுமைகள் படைக்க வேண்டுமா? உங்கள் தொழில்துறைக்குப் பொருத்தமில்லாத ஒருவரை உங்கள் நிறுவனத்தில் பணிக்கமர்த்துங்கள். அவர் அவரது இயல்புக்கும் துறைக்கும் ஏற்ப அங்கிருந்து பணியாற்ற முனைவார். அவரது சிந்தனைக்கேற்ப உங்கள் நிறுவனம் புதுமையாக வளரும். நீங்கள் நினைக்காத புதிய கோணத்தில் புதிய பாதையில் உங்கள் நிறுவனம் பயணிக்கும்.

ஆம், இது நிபுணத்துவத்திற்கு உள்ள மற்றுமொரு சிறப்பம்சம். உங்களை வேறு ஒரு துறையில் பணிக்கமர்த்தினாலும் நீங்கள் உங்கள் நிபுணத்துவத்திற்கேற்ப புதிய பாதையில் பயணிப்பீர்கள். உங்கள் நிறுவனத்தைக் கொண்டு செல்வீர்கள். இதனால்தான் பில்கேட்ஸ் கூறுவார்

"எனக்கு சோம்பேறிகள் தேவை. அவர்கள்தான் எந்த வேலையையும் இலகுவாகச் செய்வதற்கான வழிகளைக் கண்டறிவர்."

மருத்துவ ஆலோசனை பெறுவது போல கட்டடம் கட்டுவதற்கும் தொழில் தொடங்குவதற்கும், கல்வியைத் தொடர்வதற்கும், நிதி நிலைமைகளைத் திட்டமிடவும் என பல தேவைகளுக்காக மக்கள் ஆலோசனை பெறுகின்றனர். இத்தகைய ஆலோசனை வழங்கும் ஆலோசகர்கள் (Consultants) துறைசார் நிபுணர்களாகக் காணப்படுவர். அவருக்கு அந்தத் துறையில் உள்ள அனுபவம், அறிவு என்பன அந்த விடயம் தொடர்பாக எதிர்வு கூறவும் அதற்கேற்ப திட்டமிடவும் உதவுகிறது.

நீங்கள் விரும்பிய துறையில் நிபுணத்துவம் அடைய விரும்பினால் அதில் உள்ள அனைத்தும் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்ற நினைப்பில் கற்றுக் கொள்ளுங்கள். புதிது புதிதாகத் தேடுங்கள். புதிய விடயங்களை அறிந்திருங்கள். புதுமை படையுங்கள்.

# இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் உபதேசம்

வஹ்ப் இப்னு முநப்பிஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுவதாவது: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் பார்வை இழந்திருந்த காலத்தில் ஒரு நாள் நான் அன்னாரை அழைத்துக் கொண்டு மஸ்ஜிதுல் ஹறாமுக்குச் சென்றேன். அதன்போது ஓரிடத்தில் ஒரு கூட்டத்தினர் சண்டை சச்சரவு செய்து கொண்டிருந்த சப்தத்தைச் செவியுற்ற அவர்கள், அந்தக் கூட்டத்தினரிடம் தன்னை அழைத்துச் செல்லுமாறு என்னிடம் கூறினார்கள். நான் அவர்களை அங்கு அழைத்துச் சென்றேன்.

அவ்விடத்திற்குச் சென்ற இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள், அக்கூட்டத்தினருக்கு ஸலாம் கூறினார்கள். அன்னாரை உட்காருமாறு அக்கூட்டத்தினர் கேட்டுக் கொண்டனர். ஆனால், உட்கார மறுத்த அன்னார், அக்கூட்டத்தினரை நோக்கி, "அல்லாஹ்வின் பிரத்தியேக நல்லடியார்கள் யாரென்று உங்களுக்குத் தெரியாதா? அல்லாஹ்வின் கட்டளை அவர்களது வாயை அடைக்கச் செய்திருக்கும். ஆனால், அவர்கள் பேச முடியாதவர்களோ, ஊமைகளோ அல்லர். மாறாக, நல்ல முறையில் சொல்நயத்துடன் பேசக்கூடியவர்கள். நல்ல விளக்கமுள்ளவர்கள்தாம். எனினும், அல்லாஹ்வின் மகத்துவத்தை நினைவு கூர்வது அவர்களுடைய அறிவை பறக்கச் செய்துவிடுகிறது. அதனால் அவர்களுடைய இதயங்கள் துண்டு துண்டாக ஆக்கப்பட்டு அவர்களுடைய நாவுகள் பேச முடியாமல் ஆகிவிட்டிருக்கும். இந்த நிலைமையின் மீதே அவர்கள் பக்குவமடைந்து விடுவார்களானால், அதன் காரணமாக நற்காரியங்களை விரைந்து செய்யக் கூடியவர்களாக ஆகிவிடுவார்கள். அந்தப் புனிதமானவர்களின் வழியை விட்டு நீங்கள் எங்கு விலகிச் சென்று கொண்டிருக்கிறீர்கள்?" என்று உபதேசம் செய்தார்கள்.

வஹ்ப் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: "இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் இந்த உபதேசத்திற்குப் பிறகு இரண்டு நபர்கள் ஒன்றுகூடி ஓரிடத்தில் பேசிக் கொண்டிருக்க நான் காணவில்லை"

ஏ.எம்.எப். பாசிலா
அறக்கியாள, கெகுணகொல்ல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓமந்தை - கிளிநொச்சி புகையிரத சேவை




- 2013 செப்டெம்பரில் கொழும்பில் இருந்து கிளிநொச்சி வரையான புகையிரத சேவை 23 வருடங்களின் பின் மீள ஆரம்பிக்கப்பட்டது.
- 252 கி.மீ. நீளமான வட பிரதேச புகையிரத பாதையில் 62 கி.மீ. நீளமான ஓமந்தை கிளிநொச்சி புகையிரத பாதை யானது இந்திய அரசின் ICON நிறுவனத்தினால் புணர மைக்கப்பட்டது.
- இச் செயற்திட்டத்திற்கு இந்திய அரசாங்கம் 800 மில்லியன் அமெரிக்க டொலர்களை பங்களிப்பு செய்துள்ளது.
- கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரைக்குமான புகையிரதப் பாதை 1905ஆம் ஆண்டில் பூர்த்தியாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 2020 ஒலிம்பிக் போட்டிகள்




- 2013 செப்டெம்பரில் ஆர்ஜென்டீனாவில் நடைபெற்ற ஒலிம்பிக் குழுவின் ரகசிய வாக் கெடுப்பில் 2020 ஒலிம்பிக் போட்டிகளை நடத்த ஜப்பானின் டோக்கியோ நகர் தெரிவாகி உள்ளது.
- இவ்வாக்கெடுப்பில் டோக்கியோ, இஸ்தான் புல், மெட்ரிட் ஆகிய நகரங்கள் போட்டியிட்டன.
- இதன் மூலம் ஜப்பான் இரண்டாவது தடவையாக (1964, 2020) ஒலிம்பிக் போட்டி களை நடத்த உள்ளமை குறிப்பிடத்தக்கது.




திரு. பீ. உமா சங்கர்,
B.Com (Jaf), M.com (Kelaniya) (R) Spl.Trd.com, NDBF, Sri Lanka Technical College - Colombo

# உலக புகையிலை விலக்கு தினம்



- உலக புகையிலை விலக்கு தினம் ஒவ்வொரு வருடமும் செப்டெம்பர் 3ஆம் திகதி அனுஷ்டிக் கப்படுகின்றது.
- 2013ஆம் ஆண்டிற்கான உலக சுகாதார ஸ்தாப னத்தின் உலக புகையிலை விலக்கு தின விருது மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் ஹாவாட் பல்க லைக்கழக ஹாவாட் சுகாதார தலைவர்கள் விருது ஆகியவற்றை இலங்கையின் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பெற்றுக் கொண்டார்.

# G - 20 உச்சி மாநாடு




- G-20 நாடுகளின் தலைவர்களது 8வது உச்சி மாநாடு 2013 செப்டெம்பரில் ரஷ்யாவின் சென்பீற்றர்ஸ் பேர்க் நகரில் நடைபெற்றது.
- இம் மாநாட்டில் உலக பொருளாதாரத்தில் கவனம் செலுத்தல் பிரதான நோக்காக இடம்பெற்றாலும், சிரிய அரசாங்கத்திற்கு எதிராக இராணுவ நடவடிக்கையை முன்னெடுப்பது குறித்த விடயம் ஆராயப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2வது ஆசிய இளையோர் விளையாட்டு விழா

▶ 2வது 'ஆசிய இளையோர் விளையாட்டு விழா' 2013 ஆகஸ்டில் சீனாவின் நாஞ்சிங் நகரில் நடைபெற்றது.

▶ இதில் சீனா 46 தங்கம், 23 வெள்ளி, 24 வெண்கலப் பதக்கங்களை பெற்று முதலிடத்திலும் இலங்கை 1 வெள்ளி, 5 வெண்கல பதக்கங்களை பெற்று பதக்கப் பட்டியலில் 21ஆம் இடத்தையும் பெற்றது.

▶ 3வது ஆசிய இளையோர் விளையாட்டு விழா இலங்கையில் நடைபெறவுள்ளது.




## பெண் சமத்துவ தினம்

▶ பெண் சமத்துவ தினம் வருடாந்தம் ஆகஸ்ட் 29ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது.

▶ பெண்களின் சமத்துவத்தை உணர்த்துவதற்காகவும், அதனை மேலும் வலுப்படுத்துவதற்காகவும் இத்தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

## ஸ்ரீலங்கா ரெலிகொம்

Sri Lanka Telecom

ஸ்ரீலங்கா ரெலிகொம் தனது தர முகாமைத்துவ முறைமைக்காக (QMS) இலங்கை தரப்படுத்தல் நிருவாகத்திடம் இருந்து ISO 9001 : 2008 தரச்சான்றைப் பெற்றுக் கொண்டது.

## அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமர்



▶ அவுஸ்திரேலிய பொதுத் தேர்தலில் பழமைவாத கட்சியைச் சேர்ந்த டோனி அப்பொட் 88 ஆசனங்களைப் பெற்று 2013 செப்டெம்பரில் பிரதமரானார்.

▶ அவுஸ்திரேலியாவுக்குப் படகில் வரும் புகலிட கோரிக்கையாளர்களை தடுத்து நிறுத்துதல், காபன் மாசு வெளியீடுகள் தொடர்பான வரிகளை குறைத்தல் போன்ற விடயங்களுக்கு புதிய பிரதமர் முன்னுரிமை வழங்குவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

▶ இவர் 1957ஆம் ஆண்டு லண்டனில் பிறந்தார். கடந்த 1994ஆம் ஆண்டிலிருந்து பாராளுமான்ற உறுப்பினராக உள்ளார்.




## இலங்கையின் முதலாவது கணினி உற்பத்தி நிலையம்

▶ இலங்கையின் முதலாவது கணினி உற்பத்தி நிலையம் அம்பாந்தோட்டை சூரியவெவவில் 2013 ஆகஸ்டில் ஆரம்பிக்கப்பட்டது.

▶ இலங்கை மற்றும் கிழக்கு பிராந்திய வலய நாடுகளுக்குத் தேவையான கணினிகளை உற்பத்தி செய்யும் பிரதான நோக்குடன் இந்நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



## சர்வதேச ஒலிம்பிக் சம்மேளன புதிய தலைவர்

▶ சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத்தின் புதிய தலைவராக ஜேர்மனியின் தோமஸ் பாக்ஹ் நியமிக்கப்பட்டுள்ளார்.

▶ இவர் இதற்கு முன்னர் IOC யின் துணைத்தலைவராக கடமையாற்றினார்.

▶ ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வென்ற ஒருவர் சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத்திற்கு தலைவராக பொறுப்பேற்பது இதுவே முதல் முறையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியும் இலக்கியமும்

## 10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

ஆசிரியர்: நஸ்ரா நிசாம்தீன் BA (Hons) PGDE

வினாத்தொகுப்பு தொடர்ச்சி பகுதி iii

### மாதிரி வினாத்தொகுப்பு 09

01. சுருக்கமான விடை தருக

i. "விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனையவர்"

அ. பொருள் கூறுக.

ஆ. அணியை விளக்குக.

ii. பி.எஸ். ராமையாவின் சிறுகதைத் தொகுப்புகள் 2 கூறுக.

iii. கிராம சேவகர், தர்மலிங்கத்தை எவ்விடயமாக சந்திக்க வருகிறார்.

iv. சடையப்பருக்கு இன்னுமொரு பெயர் இருப்பதாக கம்பர் கூறும் பெயர் என்ன? சடையப்பரின் மனைவி யார்?

v. "மருள் தீர்ந்த மாசறு காட்சியவர்" யார்?

vi. "காணி நிலம் வேண்டும்" எனப்பாடியவர் யார்?

vii. "மகாலட்சுமி போல இருக்கீங்கம்மா உங்களுக்கு ஒண்ணும் கொறவு வராது"

அ. யாருக்கு கூறப்பட்டது?

ஆ. ஏன் கூறப்பட்டது?

viii. "மின்னுந்தார் வீமன்றன் மெய்மரபிற் செம்மை சேர் கன்னி..."

அ. தமயந்தி எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறாள்?

ஆ. வீமன் என்பவர் யார்?

ix. பட்டணத்துப் பாடசாலை எக்கிராம நேர் சாலையை விட பெரியது?

x. பெண்ணம்மா ஊரிற் பிறந்தாரைப் போல் எனும் தொடரை விளக்குக.

### மாதிரி வினாத்தொகுப்பு 10

01. சுருக்கமான விடை தருக

i. "கல்லாதான் ஒட்பங் கழியநன்றாயினுங் கொள்ளார் அறிவுடை யார்"

அ. பொருள் எழுதுக.

ஆ. கொண்டு கூட்டி எழுதுக.

ii. "கலைமகள் எனக்கு திருவருள் செய்கிறாள் உமக்கோ குற்றவேல் செய்கிறாள்" என கூத்தர் கம்பரிடம் கலைமகளாக யாரை குறிப்பால் சுட்டிக் காட்டுகிறார்?

iii. "படை வேள் பகழி அஞ்சுமஞ்சுங்கைய வஞ்சுமஞ்சுங் கடலஞ்சுமஞ்சும்..." எனும் நமச்சுவாயப் புலவர் பாடல் எதனைப் பற்றி பாடுகிறது? இவ்வரிகளை சந்தி பிரித்தெழுதுக.

iv. தருமலிங்கம் தோட்டத் தொழிலாளியாக எவ்வளவு காலம் வேலை செய்கிறார்? அவர் வேலை செய்யும் பெரிய டொக்டர் பெயர் என்ன?

v. குஞ்சம்மாளின் கணவர் பெயர் என்ன? கு.பா.ரா. என்பதில் "ரா" என்னும் முதலெழுத்துக்குரிய பெயர் யாது?

vi. "நாண்மணிக்கடிகை நகை நலம் பற்றி யாது கூறுகிறது?

vii. "பாதகா! என் சிங்கத்தை மறைந்து கொன்றுவிட்டாயே..." யாரால் யாருக்குக் கூறப்பட்டது.

viii. "பசுவுக்கொரு வாயுரை..." எனும் பாடலைப் பாடியவர் யார்?

xi. குமாரப் புலவரின் ஊரின் பெயர் என்ன?

x. "திண்டோள் வயவேந்தர் செந்தாமரை முகம் போய் - வெண்டா மரையாய் வெளுத்தவே" விளக்குக.

### மாதிரி வினாத்தொகுப்பு 11

01. சுருக்கமான விடை தருக.

i. "நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னதே கல்லார்கட் பட்ட திரு" கொண்டு கூட்டி எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. கவிச்சக்கரவர்த்தி நாடகம் எத்தனை அங்கங்களைக் கொண்டது?

'காடவ நல்லூர்' எனும் ஊர் எங்கிருப்பதாக இந்நாடகம் கூறுகிறது?

iii. "வியாதகீதை" எனப்படுவது யாது?

vi. சோழீசர் கற்கோயில் யாரால் கட்டப்பட்டது?

v. நீதிப்பாடல்களில் வந்துள்ள நான்கு பழமொழிகள் எழுதுக.

vi. "பனியலயத்து சாவல் பாசமுள்ள வெள்ளச் சாவல்... காலுவளர்ந்த சாவல் கண்டாலும் பேசுவதில்லை" என்ற பாடல் வரியில் உணர்த்தப்படும் உணர்வு யாது?

'சாவல்' என குறிப்பால் காட்டப்படுவது யாரை?

vii. பாண்டிய மன்னனின் பவனியை மகள் எப்படிப் பார்த்தாள்?

viii. 'வாக்குண்டாம்' நீதிப்பாடல்கள் கூறும் விடயங்கள் 02 கூறுக.

இந்நீதி நூலின் வேறு பெயர் என்ன?

xi. "ஒண்ணும் இருக்காது கொஞ்சம் இரகம் வருத்தும்" யாரால் கூறப்பட்டது?

x. 'கையில் வெண்ணெயிருக்கு நெய்தேடி அலையும், வெள்ளியரும் உண்டு' என முதியவர் ஏன் கூறுகிறார்? 'வெள்ளியர்' என்பதன் பொருள் என்ன?

இன்ஷா அல்லாஹ் மீண்டும் சந்திப்போம்.

# சிந்தனைத் துளிகள் சில

- "ஒரு வினாடி நேரச் சிந்தனை ஓர் இரவு வணக்கத்தை விடச் சிறந்தது"
- "சிந்தனை என்பது ஒரு கண்ணாடி"
- "தனித்து உட்கார்ந்திருப்பது சிந்தனைக்குரிய சூழலை ஏற்படுத்துகிறது, ஒரு மனிதன் தொடர்ந்து சிந்தனை செய்தால் அதுவே வெற்றிக்கு வழி"
- "உங்கள் கண்களில் கண்ணீர் நிற்கட்டும்; உங்கள் உள்ளத்தில் சிந்தனை நிரம்பட்டும்!"
- "உலகை மட்டும் பற்றிய சிந்தனை ஆத்மிக வாழ்வுக்குத் திரை போட்டு விடுகிறது, மறுமை பற்றிய சிந்தனை அறிவிற்கு வித்திடுகிறது, உள்ளத்திற்கு உயிர் கொடுக்கிறது"

எம்.ஆர்.எப். ரபிலா
பாத்திமா சஹ்றா மகளிர் அரபுக்கல்லூரி

## அகரம் பாடசாலை அறிமுகம்

- உங்கள் பாடசாலையை அறிமுகப்படுத்த உங்கள் அபிமான சஞ்சிகையான அகரம் தயாராக உள்ளது.
- உங்கள் பாடசாலை, அதன் வரலாறு, சாதனைகள் என்பவற்றை அறிமுகப்படுத்த அகரம் களம் அமைத்துக் கொடுக்கிறது.

தொடர்புகளுக்கு: முஸ்தாக் : 0777 369 306
அலா அஹ்மத் : 0716 919 423

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேரத்தை ஒழுங்குபடுத்தி எனது நாளாந்த வாழ்க்கைக்கான ஒரு நேரசூசியைத் தயாரித்துக் கொள்வது எப்படி?

ஹனீபா ஏ.வஹாப் (இஸ்லாஹி)

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு

கற்றலில் நான் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் உங்களுடைய ஆலோசனைகள் எனக்கு மிகவும் பிரயோசனமாக அமைந்தன, அல்ஹம்துலில்லாஹ். தற்போது நான் உங்களுடைய ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் நடைமுறைப்படுத்த ஆரம்பித்திருக்கின்றேன். எனினும், நேரத்தை ஒழுங்குபடுத்துவது எப்படி என்ற விடயத்தில் எனக்கு இன்னும் தெளிவு போதாமல் இருக்கிறது.

உதாரணமாக காலை 7:30 மணிக்கு பாடசாலை ஆரம்பிக்கிறது. பாடசாலை முடிந்து வீடுவந்து சேர மாலை 2:30 மணி ஆகின்றது. சில நேரம் விசேட வகுப்புகளுக்காக காலை 06:30 மணிக்கே பாடசாலை செல்லவேண்டியிருக்கிறது. அது தவிர பிரத்தியேக வகுப்பிற்கு மாலை 03:30 மணிக்குச் சென்றால் மீண்டும் வீடு வந்து சேர்வதற்கு 05:00 மணி ஆகின்றது. எஞ்சிய நேரத்தில் தான் பாடங்களை மீட்ட வேண்டும். அவ்வாறெனில் பாட மீட்டலுக்கான நாளாந்த நேர அட்டவணையை எவ்வாறு நான் ஒழுங்குபடுத்தித் தயாரித்துக் கொள்ள முடியும்?

இந்த வருடம் நான் க.பொ.த (சா.த) பரீட்சை எழுத இருக்கிறேன். பரீட்சைக்கு இன்னும் சுமார் மூன்று மாதங்களே உள்ளன. எமது பாடசாலையிலும் சரி பிரத்தியேக வகுப்புகளிலும் சரி இன்னும் முழுமையாக பாடத்திட்டங்கள் முடிக்கப்படவில்லை. குறிப்பாக கணிதம், விஞ்ஞானம் மற்றும் இஸ்லாம் போன்ற பாடங்களில் ஏராளமான அலகுகள் முடிக்கப்படாமல் உள்ளன. இது தவிர தரம் பத்துக்குரிய பாடங்களும் மீட்ட வேண்டியிருக்கிறது.

வழமையாக நான் சுபஹுத் தொழுகையை தொழுது, காலை அவ்றாதுகளையும் ஓதி நீங்கள் கூறிய பிரகாரம் சிறிது நேரம் ரிலக்ஸேஸன் செய்வதுடன் சிறிய உடற்பயிற்சிகளையும் மேற்கொள்கிறேன். பின்னர் பாடசாலைக்குச் செல்லத் தயாராகிறேன்.

மாலையில் மஃரிப் தொழுகையின் பின்னர் பாடங்களை மீட்ட ஆரம்பித்து இஷா வரை படித்து விட்டு இஷாத் தொழுகையை நிறைவேற்றிய பின் குர்ஆன் ஓதுகிறேன். பின்னர் இரவு உணவை உட்கொள்கிறேன். இரவு 09:00 மணி முதல் 10:00 மணி வரை மீண்டும் பாடங்களை மீட்டுகிறேன். இதுவே, எனது நாளாந்த செயற்பாடாக இருக்கிறது. விடுமுறை நாட்களில் காலையிலும் மாலையிலும் பிரத்தியேக வகுப்புக்கள் இருக்கின்றன.

என்னுடைய பாட மீட்டல் ஒழுங்கை இன்னும் மேம்படுத்த விரும்புகிறேன். என்னுடைய வாழ்க்கையை ஒழுங்குபடுத்தவும், என்னுடைய கால அட்டவணையைத் தயாரிப்பதற்கும் உதவுவீர்கள் என எதிர்பார்க்கிறேன். நான் பாடங்களை படிப்பது போதாது, இன்னும் அதிகரிக்க வேண்டும் என நினைக்கிறேன். அவ்வாறெனில் நான் என்ன செய்ய வேண்டும்? நாளாந்த நேரசூசியைப் பின்பற்ற முடியாவிட்டால் எனக்கு நானே எவ்வாறு தண்டனை வழங்குவது? என்னைப் பொறுத்தவரை வார இறுதி நாட்களில் என்னுடைய முயற்சிகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் விளைவுகளும் குறைவடைவதை நான் அவதானிக்கிறேன். அதற்கு என்ன தீர்வு? இன்னும் 3 மாதங்களில் O/L பரீட்சை இருக்கின்றமையால் பாடங்களை இன்னும் அதிகமாக மீட்டவேண்டியிருக்கிறது. எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது. ஒழுங்காக சாப்பிடுவதுகூட இல்லை. என்னுடைய பசி மற்றும் வாழ்க்கையைத் தொலைத்துவிட்டேன்.

என்னுடைய நாளாந்த வாழ்கையில் பாடங்களை மீட்டுவதற்கு நேரசூசி ஒன்றைத் தயாரித்துக் கொள்ள நீங்கள் எனக்கு உதவிசெய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

வஅலைக்குமுஸ்ஸலாம் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹூ

*அல்லாஹ் உங்களுக்கு அருள்புரிவானாக!*

அகரத்தின் தொடர் வாசகர்களுள் ஒருவராக இருந்துகொண்டு என்னைத் தொடர்பு கொண்டமைக்கு அகரத்தின் சார்பாகவும் தனிப்பட்ட முறையிலும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் மேலே குறிப்பிட்ட ஒழுங்குபடுத்தப்பட்ட உங்களுடைய திட்டமிடலானது என்னை மிகவும் ஆச்சரியத்துக்குள்ளாக்கிவிட்டது. இதில் திருப்தியடையவில்லை எனில் நீங்கள் பதகளிப்பான நிலையில் இருக்கின்றீர்கள் என நான் நினைக்கிறேன். எனினும், நுணுக்கமாகப் பார்க்கின்ற போது நீங்கள் விபரித்த உங்களுடைய நேர முகாமைத்துவமானது மிகச் சிறப்பாகக் காணப்படுகின்றது. உங்களுடைய இச்செயன்முறைக்கான சிறந்த விளைவுகளை நீங்கள் பின்னர் கண்டுகொள்வீர்கள் என நம்புகிறேன். உங்களுடைய இந்த முயற்சிக்கான விளைவை அவசரமாக எதிர்பார்க்க வேண்டாம்.

உங்களுக்கென ஒரு நேரசூசியை நான் வரையறுத்து தயாரித்துத் தருவது அறிவுபூர்வமான ஒன்றென நான் கருதவில்லை. உங்களுடைய நிலைமைகள் பற்றியும் உங்களுக்குக் கிடைக்கும் நேரங்கள் பற்றியும் நீங்களே நன்கு அறிவீர்கள். சில வேளைகளில் வார இறுதி நாட்களில் நீங்கள் அதிகமான நேரத்தை பாடங்களை மீட்டுவதற்காகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். அவ்வாறு பாடங்களை மீட்டுவதற்காக நேரத்தை ஒதுக்கும் போது உடலுக்கும் உள்ளத்துக்கும் ஓய்வெடுத்துக் கொள்வதற்காகவும் நேரத்தை ஒதுக்க மறந்து விடாதீர்கள். தவிர உங்களுடைய நேரசூசியில் காலையில் படிப்பதற்கென நேரம் ஒதுக்கப்படவில்லை என்பதை அவதானிக்க முடிகிறது. அதிகாலை 3:30 மணியளவில் படுக்கையை விட்டு எழுந்தீர்களாயின் சுமார் ஒரு மணித்தியாலம் காலையில் படிப்பதற்காக ஒதுக்கிக் கொள்ள முடியும்.

நீங்கள் எதிர்நோக்கும் வஸ்வாஸ், மனக்குழப்பம், மற்றும் உளநெருக்கடி என்பன பதகளிப்பின் காரணமாக ஏற்பட்டவை என நம்புகிறேன். உங்களுடைய பாடசாலையில் உளவளத்துணை, வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்குப் பொறுப்பாகவுள்ள ஆசிரியரை அணுகி தேவை ஏற்படும் பட்சத்தில் ஒரு மனநல மருத்துவரைச் சந்திக்க முயற்சியுங்கள். மனநல வைத்தியரைச் சந்திப்பவர்கள் பைத்தியக்காரர்கள் என்ற ஒரு தப்பபிப்பிராயம் எமது பிரதேசங்களில் நிலவுகிறது. இது முற்றிலும் தவறானது. உடலுக்குக் காய்ச்சல் வந்தால் வைத்தியரைச் சந்திப்பது போன்றே உள்ளத்துக்கு ஒரு பிரச்சினை என்றால் அது தொடர்பான ஒரு வைத்தியரைச் சந்திக்கிறோம்.

நேரத்தை முகாமை செய்வதில் உங்களுக்கு கஷ்டம் இருப்பதாகவும், போடப்பட்ட நேரசூசிக்கிணங்க செயற்பட முடியவில்லை என்றும் அதற்காக உங்களுக்கு நீங்களே என்ன தண்டனை வழங்கலாம் என்றும் கேட்டிருக்கிறீர்கள். உங்களுக்கு நீங்களாகவே தண்டனை வழங்குவதற்கான எந்த நியாயங்களையும் உங்களிடத்தில் நான் காணவில்லை. மாறாக, உங்களுக்கு நீங்களே பரிசுகளை வழங்கக் கடமைப்பட்டிருக்கிறீர்கள் எனலாம். ஏனெனில், நீங்கள் திருப்திப்படாவிட்டாலும் உங்களுடைய நேர ஒழுங்கமைப்பானது மிகவும் நன்றாகக் காணப்படுகின்றது. இந்த ஒழுங்கிலேயே செல்வீர்களானால் நீங்கள் நல்ல பல விளைவுகளை விரைவில் காண்பீர்கள், இன்ஷா அல்லாஹ்.

சில நேரங்களில் போடப்பட்ட நேரத்துக்குச் செயற்பட முடியாதளவு வேறு சில முக்கியமான அம்சங்கள் குறுக்கிடலாம். அதற்காக கவலைப்படத் தேவையில்லை. எஞ்சியிருக்கின்ற நேரங்களில் முக்கியத்துவம் குறைந்த வேலைகளைப் பின்தள்ளி விட்டு அவற்றைப் படிப்பதற்காகப் பயன்படுத்தலாம். வார இறுதி நாட்களில் உற்சாகம் இழந்து செல்கிறது எனவும் குறிப்பிட்டீர்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் சாதிக்க வேண்டிய உங்களுடைய

(08 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பகுதி A

01. ஒருவர் ரூ. 327 பெறுமதியான பொருளை கடையில் வாங்கி ரூ. 500க்கு கடை உரிமை யாளரிடம் கொடுத்தால் மீதியாக எவ்வளவு தொகையைப் பெறுவார்?

02. தரப்பட்ட உருவிலுள்ள மொத்த சதுரங்களின் எண்ணிக்கை யாது?



03. $2025ml$ என்பதை $l$ இல் தருக.

04. உருவில் காட்டப்பட்டுள்ள முக்கோணி எவ் வகையான முக்கோணி என பக்கங்கள் சார் பில் தருக.




05. $m-1=2$ எனின் $m$ இன் பெறுமானம் யாது?

06. சுருக்குக. $(0.1)^2$

07. 16, 1/2, 0.25, $\sqrt{3}$ என்பவற்றில் விகிதமுறா எண் யாது?

08. $64cm^2$ பரப்பளவுள்ள சதுர வடிவமான காணி ஒன்றின் ஒரு பக்க நீளம் எத்தனை $m$ ?

09. ஒரு வகுப்பிலுள்ள 40 மாணவர்களில் 15 பேர் மாணவிகள் எனின், ஆண் மாணவர்களின் எண்ணிக்கையை முழுவதன் பின்னமாகத் தருக.

10. தரப்பட்ட சதுரத்தின் பக்க நீளம் யாது?




11. சுருக்குக. $2-1.47$

12. 1:20 000 என்ற அளவிடைக்கு வரையப்பட்ட அளவிடைப்படமொன்றில் $1km$ உண்மைத் தூரத்தை எத்தனை $cm$ இனால் குறிக்க வேண்டும்.

13. சுருக்குக. $3x-(x-5)$

14. $A=\begin{bmatrix} 2 & 0 & 1 \\ -1 & 3 & 5 \end{bmatrix}$ என்ற தாயத்தின் வரிசையை எழுதுக.

15. ரூ. 700 000ஐ வருட வருமானமாக கொண்ட ஒருவருக்கு ரூ. 300 000க்கு வரிவிலக்கு அளிக் கப்பட்டு எஞ்சிய தொகைக்கு 4% வரி அற விடப்பட்டால் அவர் செலுத்த வேண்டி வருட வருமான வரி யாது?

16. $3^a=9,\ 3^x=81$ எனின் $3^{a+x}$ இன் பெறுமா னத்தைக் காண்க.

17. தரப்பட்ட நேர்கோடு $AB$ ற்கு சமாந்திரமாக உற்பத்தியினூடாக செல்லும் நேர்கோட்டின் படித்திறன் யாது?




18. கூட்டல் தொடரொன்றின் முதல் உறுப்பு 7 ஆகவும் அதன் பொதுவித்தியாசம் 4 ஆகவும் இருப்பின் இதன் பொது உறுப்பு $(Tn)$ யாது?

19. $\sqrt{\frac{3v}{\pi h}}=r$ எனின் $v$ யை எழுவாயாக மாற்றுக.

20. அப்ஸீன் அஹமட் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைவதற்கான நிகழ்தகவு 3/5 எனின் தரப்பட்ட மரவரிப்படத்தினை பூரணப்படுத்துக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. உருவில் $AB = 20cm$, $AC = 12cm$, $AX = 5cm$ எனின் $AY$ இன் நீளத்தைக் காண்க.




22. பஸ் தரிப்பு நிலையம் ஒன்றில் காணப்பட்டவர்களில் குடை வைத்திருந்தவர்கள் பற்றிய தகவல் தரப்பட்டுள்ளது எனின் நிழற்றப்பட்ட பிரதேசத்தை விபரிக்குக.




23. உருவில் $P\hat{R}T = 70^0$ $P\hat{Q}R = x$ $Q\hat{O}R = a + 65^0$ $Q\hat{R}S = a$ எனின்




i. $x$ இன் பெறுமானம் யாது?

ii. $a$ இன் பெறுமானம் யாது?

24. மாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற குறித்த கட்சியைச் சேர்ந்த $A, B$ எனும் இரு அபேட்சகர்கள் பெற்ற வாக்குகளிடையிலான விகிதம் 7:4 ஆகவும் $B$ யிலும் பார்க்க $A$ 18 000 வாக்குகள் அதிகமாக பெற்றால் $A$ பெற்ற மொத்த வாக்குகள் எத்தனை?

25. சுருக்குக. $\dfrac{x(x+5)}{x^2-25}$

26. $O$வை மையமாகக் கொண்ட வட்டத்தின் ஆரை a எனின் நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பு $a^2\left(\dfrac{2-\pi}{2}\right)$ எனக் காட்டுக.




27. காரணி பற்றிய அறிவைப் பயன்படுத்தி $(\sqrt{5}-x)(x+\sqrt{5})$ இனைச் சுருக்குக.

28. உருவில் $PR = 12cm$ $PQ = 14cm$, $RX = 6cm$ எனின்




i. $XQ$ இன் நீளம் யாது?

ii. $RP // XY$ ஆக இருப்பதற்கான காரணம் யாதாக இருக்கும்?

29. $a, b, c$ என்பன 10லும் குறைந்த நேர்நிறை எண்கள் $a + b = c$ ஆகவும் $a^3 + b^3 = c^2$ ஆகவும் இருக்கத்தக்கதாக $a, b, c$ இன் பெறுமானங்களைக் காண்க.

30. $A, B, C$ என்பன யுத்தக் கப்பல்களாகும். இதன் கட்டளைக் கப்பல் $(P)$ ஆனது $B, C$ இலிருந்து சமதூரத்திலும் $A$ யிலிருந்து $2.5km$ தூரத்திலும் ($B, C$ உள்ள பக்கத்தில்) அமைந்துள்ளது. அமைவினைப் பருமட்டாக வரைந்து காட்டுக.




## பகுதி B

01. இரண்டு ஜவுளிக்கடைகளின் விளம்பரங்கள் வருமாறு:

**Ranjanas**

**உங்கள் கொள்வனவு**

- ரூ. 1000ற்கு மேல் 3000 வரை ரூ. 10% கழிவு
- ரூ. 3000ற்கு மேல் 4000 வரை 12% கழிவு
- ரூ. 4000ற்கு மேல் 15% கழிவு வழங்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Ram Brothers**

*உங்கள் கொள்வனவு*

- ரூ. 3000 வரை ரூ. 280 கழிவு
- ரூ. 4000 வரை ரூ. 420 கழிவு
- ரூ. 4000ற்கு மேல் ரூ. 750 கழிவு வழங்கப்படும்.

i. ரவி என்பவர் ரூ. 3000 பெறுமதியான ஆடை ஒன்றினை Ranjanasஇல் கொள்வனவு செய்தால் எவ்வளவு தொகை கழிவு வழங்கப்படும்?

ii. ரவி இன் நண்பன் ரஊப் என்பவர் ரூ. 4500 பெறுமதியான ஆடை ஒன்றினை Ram Brothersல் கொள்வனவு செய்திருந்தால் அவருக்குக் கிடைக்கும் கழிவுத்தொகை யாது?

iii. இதே ஆடையை Ranjanas இல் கொள்வனவு செய்தல் இலாபகரமானதாகும். காரணம் தருக.

iv. இருவரும் சேர்ந்து மொத்த ஆடைகளையும் Ranjanas இல் கொள்வனவு செய்தால் எவ்வளவு தொகை அவர்களுக்கு கழிவாக கிடைத்திருக்கும்.

**02.** உருவில் சதுரவடிவான மைதானம் ஒன்றின் மாதிரி வடிவம் தரப்பட்டுள்ளது.




i. மைதானத்தின் பரப்பளவு யாது?

ii. இம்மைதானத்தில் $7m$ ஆரையுடைய வட்டங்கள் வரைய வேண்டும். வரையக் கூடிய அதிகூடிய எண்ணிக்கையிலான வட்டங்களை தரப்பட்ட உருவில் வரைந்து அளவுகளை குறித்துக் காட்டுக.

iii. வரையப்பட்ட வட்டங்களின் மொத்த பரப்பளவு யாது?

iv. வட்டம் தவிர்ந்த எஞ்சியுள்ள பகுதிகளின் பரப்பளவு யாது?

**03.** தனியார் அச்சகம் ஒன்றில் குறித்த மாதத்தில் அச்சிடப்பட்ட கதைப்புத்தகங்கள், கவிதைப் புத்தகங்கள் பற்றிய தகவல் கீழே தரப்பட்டுள்ளன. இயந்திம் $x, y$ என்பவற்றில் மாத்திரம் அச்சிடப்பட்ட மொத்த புத்தகங்கள் 130 ஆகும்.

a) 


i. இயந்திரம் $x$ இல் 60 புத்தகங்கள் அச்சிடப்பட்டால் இயந்திரம் $x$ இல் எத்தனை கவிதைப் புத்தகங்கள் அச்சிடப்பட்டன.

ii. இயந்திரம் $y$ இல் அச்சிடப்பட்ட கவிதைப் புத்தகங்கள் 30 எனின் அதில் அச்சிடப்பட்ட கதைப் புத்தகங்கள் எத்தனை?

iii. வென்னுருவை பூரணப்படுத்துக.

b) மேற்குறித்த வென்வரிப்படத்தைப் பயன்படுத்தி வரையப்பட்ட மரவரிப்படம் தரப்பட்டுள்ளது. மரவரிப் படத்தைப் பூரணப் படுத்துக.




c) ஒரு புத்தம் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டால் அது

i. இயந்திரம் $x$ இல் அச்சிடப்பட்ட கவிதைப் புத்தகமாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

ii. இயந்திரம் $y$ ல் அச்சிடப்பட்ட புத்தகமாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

**04** வெளிநாட்டில் வேலை புரியும் சாகிர் என்பவர் தன் மனைவிற்கு மாதம் தோறும் அனுப்பிவைக்கும் தொகையை அவள் செலவு செய்யும் விதம் கீழே தரப்பட்டுள்ளது.

**உணவு: கல்வி =7:3**

a) i. அவள் கல்விக்காக செலவு செய்யும் தொகை முழுவதன் என்ன சதவீதம்?

ii. கல்விக்காக செலவு செய்யும் தொகை ரூ. 7200 எனின், உணவுக்காக செலவு செய்த தொகை யாது?

( 08ஆம் பக்கம் பார்க்க... )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10, 11 தர மாணவர்களுக்கு

# விஞ்ஞானம்



ஆசிரியர்: எம்.எம்.எஸ். பிரேம் நவாப்

## பொறிமுறை சக்தியை அன்றாட வேலைகளுக்காகப் பயன்படுத்தல்

### தரம் : 10

* சக்தி என்பது வேலை செய்வற்கான ஆற்றல் ஆகும். வேலை செய்யும் போது சக்தி செல வாகும்.
* வேலை என்பது விசையின் பிரயோகத்தினால் இயக்கம் நிகழ்தல் ஆகும்.

வேலை = விசை X விசையின் பிரயோகப்புள்ளி விசையின் திசையில் அசைந்த தூரம்

**சக்திக் காப்பு விதி**

* சக்தியை ஆக்கவோ அழிக்கவோ முடியாது. வேலை செய்யப்படும் போது சக்தியானது ஒரு வடிவத்திலிருந்து இன்னோர் வடிவத்திற்கு மாற்றப்படுகின்றது.
* பொருள் ஒன்றினது பொறிமுறைச் சக்தி ஒரு மாறிலிப் பெறுமானமாகும். இது அழுத்தசக்தி (Ep) இயக்கசக்தி (Ek) என இரு வகைப்படும்.

| Ep + Ek = மாறிலி |
|---|

**அழுத்த சக்தி** (Ep)

* இது இரு விதங்களில் உருவாகின்றது.

1. யாதேனும் பொருளொன்றில் அதன் உயரம் காரணமாக சேமிக்கப்படும் சக்தி ஈர்ப்பினா லான அழுத்தசக்தி எனப்படும். இதற்கான சமன்பாடு;

| அழுத்தசக்தி = mgh |
|---|

2. ஈர்க்கப்பட்ட வில், ஈர்க்கப்பட்ட றப்பர் நாடா, நெருக்கப்படும் வளி என்பவற்றில் சேமிக்கப் படும் சக்தி மீளியல் அழுத்தசக்தி எனப்படும்.

**இயக்கப்பாட்டுச் சக்தி** (Ek)

* அசையும் பொருள் கொண்டுள்ள சக்தி இயக்க சக்தி எனப்படும். இதற்கான சமன்பாடு;

| இயக்க சக்தி = $1/2\ mv^2$ |
|---|

**வலு** (Power)

* வேலை செய்யும் வீதம் வலு எனப்படும். அல் லது ஒரு செக்கனில் நிலைமாற்றப்பட்ட சக்தி யின் அளவு வலு எனப்படும்.

$$\text{வலு} = \frac{\text{வேலையின் அல்லது சக்தியின் அளவு}}{\text{எடுத்த நேரம்}}$$

01. மின் உயர்த்தியொன்று நிலத்திலிருந்து 30m உயரத்திலுள்ள கட்டடமொன்றின் தளத்திற்கு 50kg நிறையுடைய மனிதன் ஒருவனை 1200N இழுவை விசையில் 40 செக்கனில் கொண்டு சென்றது. ($g = 10\ ms^{-2}$ எனக் கருதுக)

   i. உயர்த்தியினால் செய்யப்பட்ட வேலை யாது?

   ii. உயர்த்தியின் வலுவைக் காண்க.

   iii. 30m உயரத்திற்குச் சென்ற மனிதனின் அழுத்த சக்தியின் அளவைக் காண்க.

   iv. கட்டடத்தின் குறித்த உயரமொன்றிலி ருந்து கீழே செங்குத்தாக விடப்பட்ட 2kg திணிவுடைய பொருள் நிலத்தை $10ms^{-1}$ வேகத்துடன் அடையுமெனின் அது நிலத் தில் மோதும் போதான அதன் இயக்கசக்தி யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விடைகள்

01\. i. வேலை = விசை x தூரம்

$= 1200N \times 30m$

$= 36\,000\ J$

ii. வலு $= \frac{\text{வேலையின் அளவு}}{\text{நேரம்}}$

$= \frac{36\,00\not{0}\ J}{4\not{0}} = 900\ w$

iii. அழுத்த சக்தி = mgh

$= 50 \times 10 \times 30 = 15\,000\ J$

iv. இயக்க சக்தி $= \frac{1}{2}\ mv^2$

$= \frac{1}{\not{2}} \times \not{2} \times 10 \times 10 = 100\ J$

### வேலையை இலகுவாக்கும் முறைகள்

* வேலையை இலகுவாக்க உபயோகிக்கப்படும் உத்திகளை இரண்டாகப் பிரிக்கலாம்.

  1\. எளிய பொறிகள் 2. எஞ்சின்கள்

* ஓரிடத்தில் பிரயோகிக்கும் எத்தளம் (விசை) மூலம் மற்றோரிடத்தில் சுமையை ஆளுவதற்குப் பயன்படும் கருவிகள் எளிய பொறிகள் ஆகும். இவை பிரதானமாக 4 வகைப்படும்.

  1. நெம்புகள்
  2. சாய்தளம்
  3. கப்பிகள்
  4. சில்லும் அச்சாணியும்

* பொறியில் பிரயோகிக்கும் எத்தனத்தின் மூலம் எத்தனை மடங்கு சுமை ஆளப்படுகின்றது என்பது பொறிமுறைநயம் ஆகும்.

* குறித்த நேரத்தில் எத்தனம் இயங்கிய தூரத்திற்கும் சுமை அசைந்த தூரத்திற்குமிடையிலான விகிதம் வேகவிகிதம் ஆகும்.

* பொறியின் திறன்:

$$\text{திறன்} = \frac{\text{பொறிமுறை நயம்}}{\text{வேக விகிதம்}} \text{ or } \frac{\text{பயப்பு வேலை}}{\text{பெய்ப்பு வேலை}}$$

02\. 4 கப்பிகளைக் கொண்ட கப்பித் தொகுதி மூலம் 30kg திணிவுடைய பொருள் ஒன்று 100N எத்தனத்தைப் பயன்படுத்தி உயர்த்தப் படுவதை கீழ்வரும் படம் காட்டுகிறது.

i. இதனுடைய பொறி முறை நயத்தைக் காண்க.

ii. இதன் வேகவிகிதம் யாது?

iii. இக்கப்பித் தொகுதியின் திறனைக் காண்க.

iv. இதன் திறனை மேலும் அதிகரிக்க உதவும் வழிகளைக் குறிப்பிடுக.

v. எவ்வாறான கப்பியில் பொறிமுறைநயம் எப்போதும் 1 இலும் குறைவாக இருக்கும்.




### விடைகள்

02\. i. பொறிமுறை நயம் $= \frac{\text{சுமை}}{\text{எத்தனம்}}$

$= \frac{300N}{100N} = 3$

ii. வேக விகிதம் $= \frac{\text{எத்தனம் அசையும் தூரம்}}{\text{சுமை அசையும் தூரம்}}$

$= \frac{4x}{x} = 4$

iii. திறன் $= \frac{\text{பொறிமுறை நயம்}}{\text{வேக விகிதம்}} \times 100\%$

$= \frac{3}{4} \times 100\% = 75\%$

iv. 1. கப்பிகளின் உராய்வினைக் குறைத்தல்.

2. குறைந்த திணிவுடைய கப்பிகளைப் பயன்படுத்தல்.

3. இலேசான (நிறை குறைந்த) கயிற்றைப் பயன்படுத்தல்.

v. தனிக்கப்பிகளில்

(04 ஆம் பக்கத் தொடர்)

போன்ற இபாதத்துக்களும் இத்தினங்களில் அதிகமான நன்மைகளைப் பெற்றுத் தரக் கூடியனவாகும். எனவே, எம்க்கு அல்லாஹ் வழங்குகின்ற இவ்வுயரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி எம்மால் முடிந்தளவு நன்மைகள் செய்து அல்லாஹ்வின் அன்பைப் பெற முயற்சிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கிகளுக்கும் சூழலிற்கும் இடையிலான தொடர்புகள்

**தரம் 11** **உயிரியல்**

* உயிர்க்கோளத்தின் ஒழுங்கமைப்பு மட்டமானது எளிய அமைப்பிலிருந்து சிக்கலான அமைப்பு வரை பின்வருமாறு குறிப்பிடப் படும்.

தனியன் → குடித்தொகை → சாகியம் → சூழற்தொகுதி → உயிர்க்கோளம்

01. குடித்தொகை, சாகியம், சூழற்தொகுதி என்பதன் வரைவிலக்கணங்களை எழுதுக.

**குடித்தொகை :** குறித்த பிரதேசத்தில் குறிப்பிட்ட காலப்பகுதியில் இடைத்தாக்கம் புரிந்து வாழும் ஒரே இனத்தைச் சேர்ந்த தனியன்களின் மொத்த எண்ணிக்கை குடித்தொகை எனப்படும்.

**சாகியம் :** குறித்த பிரதேசத்தில் இடைத் தொடர்புகளைப் பேணியவாறு வாழும் சகல குடித்தொகைகளும் ஒருங்கே சாகியம் எனப்படும்.

**சூழற்தொகுதி :** ஒரு சாகியமும் அதன் மீது செல்வாக்குச் செலுத்தும் பௌதீகக் காரணிகளும் ஒருங்கே சூழற்தொகுதி எனப்படும்.

02. பின்வரும் உணவுச்சங்கிலியைக் கருதுக.

தாவரம் → தத்துவெட்டி → தவளை → பாம்பு → மயில் → புலி

i. இதில் எத்தனை இணைப்புக்கள் உள்ளன?

ii. இதில் மிகக்குறைந்த எண்ணிக்கையில் இருக்கும் அங்கி எதுவாக இருக்கும்?

iii. இதில் பாம்பு எத்தனையாம் நுகரி ஆகும்?

iv. மேற்படி அங்கிகளை சக்திக் கூம்பகம் ஒன்றில் குறித்து வரைந்தால் அதன் அடிப் பகுதியில் இருக்கும் அங்கி எது?

v. இங்கு தத்துவெட்டிகளினுள் அடங்கியுள்ள சக்தி 3000KJ ஆயின் அதனை உண்ணும் தவளைக்கு கிடைக்கும் அண்ணளவான பெறுமானம் யாது?

vi. தத்துவெட்டியினுள் காணப்பட்ட சக்தி முழுவதுமாக தவளைக்குக் கடத்தப்படாமைக்கான காரணங்கள் எவை?

**விடைகள்**

i. 5 இணைப்புக்கள் ii. புலி

iii. 3ம் படி நுகரி iv. தாவரம்

v. 300KJ

v. சுவாசத்தின் போது சக்தி இழக்கப்படுதல், கழிவுகளுடன் சக்தி வெளியேறுதல்.

03. அங்கிகளின் வாழ்விற்கு ஒளி, வெப்பம், ஈரப்பதன் என்பவற்றின் முக்கியத்துவங்களைக் குறிப்பிடுக.

**ஒளி:** தாவர ஒளித்தொகுப்பிற்கு உதவுகிறது. சில விலங்குகள் இருளான இடங்களிலேயே வாழும். (உ+ம்: தேள், மட்டைத்தேள்)

**வெப்பம்:** அங்கிகளின் அனுசேபத் தொழிற்பாடுகளுக்கு குறித்த வெப்பநிலை தேவைப்படுவதுடன், தாவர வளர்ச்சிக்கும் வித்து முளைத்தலுக்கும் வெப்பம் அவசியமாகும்.

**ஈரப்பதன்:** தாவர ஒளித்தொகுப்பிற்கும் வித்து முளைத்தலுக்கும், அங்கிகளின் உடற்தொழிற்பாடுகளுக்கும் நீர் தேவையான காரணியாகும்.

**கனிப்பொருள் சக்கரங்கள்**

* அங்கிகளின் உடலுக்குத் தேவையான பல்வேறு பதார்த்தங்கள் சூழலிலிருந்து அங்கிகளின் உடலிற்கும் அங்கிகளிலிருந்து சூழலிற்கும் சுழற்சியாகச் செல்லும் விதத்தைக் காண்பிக்கும் சக்கரங்கள் கனிப்பொருள் வட்டங்கள் எனப்படும்.

i. வளிமண்டலத்திற்கு காபன் விடுவிக்கப் படும் 4 செயற்பாடுகளைக் குறிப்பிடுக.

ii. வளிமண்டலத்திலிருந்து காபன் அகற்றப் படும் செயற்பாடு எது?

iii. காபன் வட்டத்தைப் பாதிக்கும் மனித நடவடிக்கைகள் 2ஐ எழுதுக.

iv. நைதரசன் பதித்தலில் நுண்ணங்கிகளின் பங்களிப்புகள் எவை?

v. நைதரசன் இறக்கம் என்றால் என்ன?

vi. நைதரசன் வட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் மனித செயற்பாடுகள் 2ஐ எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# அகில ரவிசன்க இளம் மெய்வல்லுநர்

"நான் ஒரு கிராமத்தில் உள்ள வறிய குடும்பத்தைச் சேர்ந்தவன். நான் எனது குடும்பத்தை நினைத்து பெருமைப்படுகிறேன். என் மூலம் தாய்நாட்டுக்கு வெள்ளிப் பதக்கம் ஒன்றை பெற்றுக் கொடுப்பதையிட்டு பெருமையடைகிறேன்."

இது ஒரு வெற்றி வீரனது வெற்றிக்களிப்பில் உதித்த வார்த்தைகள். எம் தாய் நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தி வெற்றி பெற்ற போது அவரது உள்ளத்திலிருந்து பீறிட்ட உணர்வுகள் எமது நாடு இவரது சாதனையால் பெருமையடைந்ததுடன் நாட்டு மக்களும் அவரை வாழ்த்தி மாலை சூடி கௌரவப்படுத்தினர்.

அந்த இளம் சாதனையாளர்தான் அகில ரவிசன்க. இரத்தினபுரி சிவாலி மத்திய கல்லூரியில் 11ம் தரத்தில் கல்விகற்கும் இவர், பின்தங்கிய கிராமத்தில் உள்ள ஒரு வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது தந்தை சந்தையில் வியாபாரம் செய்யும் ஒரு வியாபாரி.

26 ஆகஸ்ட் 2013 இல் சீனாவில் நான்சிங்கில் நடைபெற்ற 2வது ஆசிய இளையோர் மெய்வல்லுநர் போட்டியில் 110 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் 13.99 செக்கன்களில் தனது ஓட்டத்தை நிறைவு செய்து 2வது இடத்தை அடைந்து வெள்ளிப் பதக்கத்தை பெற்றுக் கொண்டார். இந்த சாதனை மூலம் 14 செக்கன்களினுள் 110 மீற்றர் தடைதாண்டல் ஓட்டத்தை நிறைவு செய்த 2வது இலங்கையர் என்ற பெருமை இவருக்குண்டு. இவரோடு போட்டியிட்ட ஜப்பான் நாட்டவரான Furuya Takumu என்பவர் 13.36 செக்கன்களில் தனது ஓட்டத்தை நிறைவு செய்து தங்கப் பதக்கத்தை வென்றார். அதே நேரம், இவர் தெரிவு காண் போட்டியின் போது 14.52 செக்கன்களில் ஓடியமை குறிப்பிடத்தக்கதாகும்.

"வெள்ளிப் பதக்கம் வென்றதையிட்டு நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இப்போட்டி மிகவும் கஷ்டமான போட்டியாக அமைந்த அதேநேரம், இதில் வெற்றி பெறுவது என்பது மிகவும் சிரமமான காரியமாகும். எனது கடும் முயற்சியின் காரணமாக எனது தாய்நாட்டுக்கு பதக்கம் பெற்றுக் கொடுத்ததையிட்டு பெருமையடைகிறேன். இவ்வெற்றி எனக்கு தைரியத்தையும், தன்னம்பிக்கையையும், உற்சாகத்தையும் தந்துள்ளது" என அகில தெரிவித்தார்.

தனது வெற்றிக்குப் பின்னணியாக இருந்த தனது பெற்றோர்கள், தனது சகோதரி, பயிற்றுவிப்பாளர், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் அவரை உற்சாகப்படுத்திய அனைவருக்கும் நன்றி தெரிவித்த அகில ரவிசன்க அண்மையில் மெல்போர்னில் நடைபெற்ற அவுஸ்திரேலிய பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டியில் அழைப்பு நாடான இலங்கை சார்பாக கலந்து கொண்டு 110 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் முதலாம் இடத்தை வென்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

"நான்சிங்கில் நடைபெற்ற ஓட்டம் பெரிய போட்டியாக இருக்கவில்லை. ஜப்பானை சேர்ந்தவர் உயர்ந்த தரத்தில் இருந்தார். ஆனால், நான் திருப்தியாகவே (தைரியமாக) இருந்தேன்" என அகில தெரிவித்தார்.

**இவரிடமிருந்து நாம் கற்கும் பாடங்கள்:**

- சாதனை புரிவதற்கு, வெற்றியடைவதற்கு வறுமை, வசதியின்மை ஒரு தடையில்லை.
- ஒரு சாதனையாளரின் வெற்றியில் அவரது பெற்றோர், அவரது ஆசிரியர்கள், ஏனையோர் வழங்கும் பங்களிப்பும் உற்சாகமும் மிக முக்கியமானதாகும்.
- சாதனைகள் முடிவதில்லை. அவை தொடர்ந்து கொண்டே இருக்கும். எனவே, புதிது புதிதாக சாதிக்க திட்டமிட வேண்டும்.
- உண்மையான சாதனையாளரிடம் தனது வெற்றி குறித்து கர்வம் இருக்காது. தன் வெற்றியை பலருடன் பகிர்ந்து கொள்வார். தனக்கு உதவியோருக்கு நன்றி செலுத்துவார்.
- ஒரு சாதனையாளரின் வெற்றியால் ஒரு குடும்பம், ஒரு சமூகம், ஒரு நாடே சாதனை சந்தோஷத்தை அனுபவிக்கிறது.
- எம்மோடு போட்டி போடுபவர்களைக் கண்டு பயப்படாது மனதை தைரியப்படுத்தி முயற்சிப்பதே வெற்றியின் ஆரம்பப் படியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விறகு கொண்டு வந்து தந்தால் உனக்கு உணவும், தண்ணீரும் தருகிறேன்" என்று கூறினார்.

அந்த மனிதர் கூறியதைக் கேட்டதும் அஹ்மத் சந்தோசமடைந்தவனாக காட்டை நோக்கி விரைந்தான். விறகுகளைச் சேகரித்து, அந்த வயலில் வேலை செய்யும் மனிதரிடம் கொடுத்து உணவையும் தண்ணீரையும் பெற்றுக் கொண்டான்.

உடனே அவற்றை எடுத்துக் கொண்டு விரைந்து, மானிடம் தண்ணீரையும் வயதான அந்த மனிதரிடம் உணவையும் கொடுத்து விட்டு, எஞ்சிய விறகுகளுடன் சந்தோஷமாக வீடு நோக்கிப் புறப்பட்டான்.

காலம் கழிந்தது. ஒரு நாள் அஹ்மத்

தமிழில்: இப்னு ஸலீம்

# பிறருக்கு உதவி வாழ்வோம்

அஹ்மத் ஏழைச் சிறுவன். தனது சிறிய குடிசையில் வசித்த அவன் காட்டுக்குச் சென்று விறகு சேகரித்து அவற்றை விற்று வாழ்ந்து வந்தான். ஒரு நாள், விறகு சேகரிப்பதற்காக அவனது வீட்டின் அருகே உள்ள அடர்ந்த காட்டுக்குப் போகும் வழியில் ஒரு வயதான மனிதரைக் கண்டான்.

"தம்பி எனக்கு மிகவும் பசியாக உள்ளது. ஏதும் உணவு இருந்தால் தர முடியுமா?" என அவர் வினவினார்.

அந்த மனிதருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் அஹ்மதுக்கு தோன்றியது. என்றாலும், அவனிடம் கொடுப்பதற்கு ஒன்றுமே இருக்கவில்லை.

"தாத்தா என்னிடம் ஒன்றுமே இல்லை, ஏதும் கிடைத்தால் கொண்டுவந்து தருகிறேன்" என்று கூறிவிட்டு பயணத்தைத் தொடர்ந்தான்.

அவ்வாறு போகும் வழியில் ஒரு மானைக் கண்டான். அது தாகத்தால் வாடி வதங்கிக் காணப்பட்டது.

"எனக்கு மிகவும் தாகமாக உள்ளது உன்னிடம் தண்ணீர் இருந்தால் தர முடியுமா?" என மான் கேட்டது.

"என்னிடம் இப்போது தண்ணீர் இல்லை, கிடைத்தால் தருகிறேன்" எனக் கூறிவிட்டு இரண்டு பேருக்கும் உதவி செய்ய முடியாததை எண்ணி கவலையடைந்தவனாக காட்டை நோக்கி விரைந்தான்.

போகும் வழியில் பரந்து விரிந்த வயலில் ஒரு மனிதனைக் கண்டான்.

"தம்பி எனக்கு விறகு தேவைப்படுகிறது. நீ எனக்கு

விறகு வெட்டிக் கொண்டிருக்கும் போது மரத்தில் இருந்து விழுந்து எழும்ப முடியாமல் கிடந்தான். அந்த பெரிய காட்டில் அவனுக்கு உதவுவதற்கு யாரும் இருக்கவில்லை. சில நிமிடங்களின் பின் அவனை வயது முதிர்ந்த அந்த மனிதர் கண்டார். உடனே அஹ்மதை நோக்கி விரைந்து வந்து அவன் எழும்பி நடப்பதற்கு உதவி செய்தார். அவனது உடலில் பல காயங்கள் காணப்பட்டன. அப்போது அவன் உதவி செய்த அந்த மான் உடனே காட்டுக்குள் விரைந்து மூலிகைகளை எடுத்து வந்தது. அதனால் அஹ்மத் குணமடைந்தான். மூன்று பேரும் ஒருவருக்கொருவர் உதவி செய்தமையை நினைத்து சந்தோஷமடைந்தனர்.

"நாம் பிறருக்கு உதவி செய்தால், நமக்கு உதவி செய்யும் நபர்களை இறைவன் ஏற்பாடு செய்வான்" என தனக்குள்ளே கூறிக் கொண்டு அஹ்மத் ஆனந்தம் அடைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைச் சாரல்

வைகறைப் பொழுதிலே
எழுந்துவிட வேண்டும் கண்ணே
வெண்ணிலா போல
சிரித்து விட வேண்டும் பெண்ணே
இறைவனைத் தொழுது
வேலையைத் தொடங்கிவிடு கண்ணே
ஈடேற்றம் வாழ்வில்
பெருகிவிடும் பெண்ணே

## கற்றுக்கொள் பெண்ணே



கொடுத்தது குறைவதில்லை
குழந்தை குட்டிக்கு அது
வந்து வாய்க்குமே பெண்ணே
பணத்தால் எதையும்
சாதிக்கலாம் என்று நம்பிவிடாதே
குணத்தால் உலகை
வெல்லலாம் என்பதை மறந்து விடாதே

ஆறடி நிலமே நமக்குச் சொந்தமடி
ஆசைகள் கூட வருமே துன்பமடி
நகைகள் மீது மோகம் கொள்ளாதடி
நாளை மறுமையை என்றும் மறவாதடி

**சிரின் சிதாரா, தரம் 11**
**கிரி/ அல்அமீன் ம.க.**
**அலபடகம, பன்னல**

## அந்த நிமிடம்



வாழ்வில் இறுதி நிமிடங்கள்
அதை சுவைக்கத்தான் வேண்டும்
மலக்குல் மௌத் எம்மை
அழைக்கும் அந்த நிமிடம்

அந்த நிமிடத்தில்
எம்மால் யாது பதிலளிக்க முடியாது
சென்றுதான் ஆக வேண்டும்

அதற்கு நாம் தயாரா?
இன்றிலிருந்தே நாம்
தயாராவோம்
அந்த நிமிடத்தை
எதிர்பார்ப்போம்

**சபானா ஜெய்னுல் ஆப்தீன்**
**அஸ்ஸலாம் மு.ம.வி.**
**இறக்குவானை**

## மறையின் ஒளி



இருளில் ஒளி சூழ...
வானில் நட்சத்திரங்கள் ஒளிர...
உன் மன ஓரத்தில் பனித்துளி போல்
இறைமறையின் தூரம்!

விழிக்கின்றேன் திடுக்கத்தோடு...
மறையின் கரங்கள்
என்னைப் பற்றிப் பிடிக்க...
இறைவனை நோக்கி
பாதங்கள் நகர்கின்றன அச்சத்தோடு!

**அமீனுதீன் ஹப்ஸா**
**பாத்திமா ஸஹ்ரா வளாகம்**

## உலகமே நீ வேண்டாம்...!

வெறுப்படைந்த என்னுள்ளம்
உன்னை ஒரு கணம்
ஏரிட்டுப் பார்க்கிறது.

நீ பூனை வேடம் தரித்த ஒரு புலி!
நீ காட்டும் அலங்காரம் – என்னை
ஒரு கணமும் மயக்காது!
நீ செய்யும் சூழ்ச்சியெல்லாம் – என்னை
ஒரு நாளும் மடக்காது!
நீ தீமைகள் விரிக்கப்பட்ட வலை
அதிலே நான் சிக்கப் போவதில்லை!

நீதான் சுவர்க்கம் என்பது உன் நினைப்பு
ஆனால் ஒன்றை மறந்து விட்டாய்!
அதுதான் மறு(மை) உலகம்...
உன்னை விட அதுதான் – எனக்கு
மேலானது!
நீ எங்காவது சென்றுவிடு
நன் சிந்திக்க வேண்டும்...
மறு உலகை
சுவனப் பூங்காவனமாக...!
வெகு விரைவில்...

**அமீனுதீன் பாத்திமா ஹப்ஸா**
**பாத்திமா ஸஹ்ரா**
**பெண்கள் அரபுக் கல்லூரி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 45 நிமிடம்

வினாப்பத்திரம் I



ஆசிரியர்கள். எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

தரப்பட்ட சொற்களுக்கு மிகப் பொருத்த மான உரு எது?

1. அழகு, மென்மை ஆசை



2. நீர், மாமிச உணவு, பறத்தல்



குறைந்த தொடர்புள்ள சோடியைத் தெரிவு செய்க.

3.



4.



வெற்றுக் கூட்டுக்குள் வரும் சரியான விடையின் கீழ் கீறிடுக.

5.

| | | |
|---|---|---|
| 4 | 5 | 5 |
| 12, 24 | 30, 60 | ....., ..... |
| 3 | 6 | 4 |

i. 70, 60    ii. 20, 30    iii. 20, 40

6.




i. 40    ii. 25    iii. 50

7.



இச்செவ்வகத்திலிருந்து இதே அளவுடைய எத்தனை செவ்வ கங்களை வெட்ட முடியும்?

i. 8    ii. 6    iii. 4

8. மாணவன் ஒருவன் 12ஆம் பக்கம் தொடக்கம் 16ஆம் பக்கம் வரை வாசித்தான். அவன் வாசித்த பக்கங்களின் எண்ணிக்கை.

i. 4    ii. 6    iii. 5

9. அடுத்துவரும் எண்ணை எண் சட்டத்தில் வரைந்து காட்டுக.



10. இவ்வுருவில் எத்தனை வட்டங்கள் உள்ளன.

.....................



11.

| | | |
|---|---|---|
| 3 | 4 | 5 |
| 6, 9 | 7, 11 | 9, ..... |

கட்டதினுள் வரவேண்டிய பொருத்தமான எண் யாது?

i. 12    ii. 12    iii. 14

12. வெற்றுக் கட்டத்திற்குப் பொருத்தமான எண் யாது?

| | | |
|---|---|---|
| 18 | 15 | 12 |
| 20 | 10 | 10 |
| 38 | 25 | ..... |

i. 24    ii. 22    iii. 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. இவ்வுருவில் எத்தனை செங்கோணங்கள் உண்டு?



i. 4 ii. 2

iii. 6

விலங்குகளினதும், பறவைகளினதும் ஒலி மரபுகள் கட்டத்தினுள் காணப்படுகின்றன. அவற்றை கண்டறிந்து அதன் குறியீடுகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

14. மயில் .................... A உறுமும்

15. ஆந்தை .................... B பிளிறும்

16. குரங்கு .................... C அகவும்

17. புலி .................... D அலப்பும்

18. யானை .................... E அலறும்

கோடிட்ட சொல்லுக்குப் பொருத்தமான சொல்லைக் கண்டறிந்து கோடிடுக.

19. காகம் இரை தேடி அலைந்தது.

i. உணவு ii. இறைச்சி

iii. தானியம்

20. மலர்களின் வாசனை கமகம என வீசியது.

i. சாப்பாடு ii. பூக்கள்

iii. வாசனைத்திரவியம்

21. ஆதவன் அன்னையை மதித்து நடந்தான்.

i. தகப்பன் ii. அண்ணி

iii. தாய்

22. வானில் தாரகைகள் கண் சிமிட்டின.

i. நட்சத்திரம் ii. சந்திரன்

iii. விண்மீன்

பின்வரும் உரையாடலை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

நான் சந்தைக்குப் போய் வருகிறேன்.

இன்று சந்தையில் விலைகள் எப்படியோ தெரியாது.

அப்பா, நானும் சந்தைக்கு வருகிறேன்.

நீ இன்னும் ஆயத்தமாகவில்லையே!

இதோ வந்து விடுகிறேன், அம்மா...

நீ கடைசி நேரம் தான் அம்மா என்று வருவாய்.

அவசரமாக ஓடி வா அப்பா ஏசப்போகிறார்.

அப்பா வாருங்கள் போவோம்.

எனது கையைப் பிடித்துக்கொண்டு வா.

வாகனங்கள் அதிகம் ஜாக்கிரதை!

அப்பா இவை என்ன?

இவைதான் கீரை வகைகள் பசளி, அகத்தி, வல்லாரை, பொன்னாங்கணி.

அந்தப்பக்கம் ஒருவர் கிழங்கு வகைகளை வைத்திருக்கிறார்.

இதோ பார் மரக்கறி வகைகளை, அந்த வயோதிபர் சில தானியங்களை வைத்து விற்பனை செய்கிறார்.

அப்பா நாங்கள் பழங்கள் காணப்படும் இடத்திற்குச் சென்று பழங்கள் வாங்குவோம்.

24. இவ்வுரையாடலில் பங்குபற்றியோர்

i. தாய், தந்தை, பிள்ளைகள்

ii. பெற்றோரும் பிள்ளையும்

iii. அம்மாவும், அப்பாவும், அண்ணாவும்

25. சந்தையில் காணப்பட்ட தானியங்கள் என கருதப்படுவன

i. குரக்கன், பயறு, நெல், கௌப்பி

ii. பயறு, நெல், வற்றாளை, கௌப்பி

iii. வல்லாரை, வெண்டிக்காய், பாகற்காய்

26. கீரை வகையில் இடம்பெறாதவை.

i. வல்லாரை, முருங்கை, அகத்தி

ii. பசளி, பொன்னாங்கனி, வல்லாரை

iii. வெண்டி, பாகல், புடோல்

27. ஒரே தொகுதியில் வரக்கூடிய மரக்கறி வகைகள்

i. வல்லாரை, முருங்கைக்காய், பசளி

ii. பாகல், அவரை, புடோல்

iii. மிளகாய், தக்காளி, பூசணி

போக்குவரத்து குறியீட்டுக்குப் பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்க.

28.



i. வலது பக்கம் திரும்பவும்

ii. முன்னால் வலப்பக்க வளைவு

iii. கீழ் நோக்கிச் செல்லவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. 

i. ஒடுங்கிய பாலம்

ii. வாகனம் செல்லத் தடை

iii. முன்னால் பாலம் கவனம்

30. 7698 எனும் எண்ணில் எண்ணிக்கையின் அடிப்படையில் அதிகமாக இருப்பது.

i. ஆயிரங்கள் ii. பத்துகள்
iii. நூறுகள்

31. 4இன் 5 மடங்குடன் 10 ஐ கூட்டினால் வரும் விடை.

i. 25 ii. 30
iii. 20

32. சதுரவடிவ காணியின் சுற்றளவு யாது?




i. 5m

ii. 20cm

iii. 20m

33. 10ரூபா நாணயங்கள் 5, 5ரூபா நாணயங்கள் 7, 2ரூபா நாணயங்கள் 10 உள்ளன. இந்த நாணயங்களின் பெறுமதி.

i. ரூபா 105.00 ii. ரூபா 95.00
iii. ரூபா 115.00

34. சரியான எண்கோவையைத் தெரிவு செய்க.

i. 66 + 60 + 6 + 6 = 238

ii. 66 + 6 + 66 + 6 =144

iii. 60 + 60 + 60 + 6 =196

பின்வரும் பிராணிகளின் பெயரை எழுதுக.

35. 

.........................

36. 

.........................

37. 

.........................

38. பின்வருவனவற்றுள் பன்மை உயர்திணை வாக்கியத்திற்குக் கோடிடுக.

i. கழுதை பொதி சுமந்து சென்றது.

ii. அமைச்சர்கள் நாடாளுமன்றத்தில் கூடினர்.

iii. ஆசிரியர் பாடம் கற்பித்தார்.

39. பின்வரும் வாக்கியத்தில் பிழையற்ற வாக்கியம்.

i. நாம் நாகரிகமாக வாழ பழகிக் கொள்ள வேண்டும்.

ii. மரவெள்ளிக்கிழங்கை நாம் சமைத்தும் சாப்பிடலாம்.

iii. குமரன் வென்னீரில் நீராடினான்.

40. பின்வருவனவற்றுள் நிகழ்கால வாக்கியம்

i. பரீட்சையில் நாம் சித்தி அடைவோம்.

ii. அவர்கள் சீகிரியாவைச் சென்றடைந்தார் கள்.

iii. நாம் நாட்டை வளப்படுத்துகின்றோம்.

41. ஓடுதல் என்பது

i. இடப்பெயர் ii. தொழிற்பெயர்
iii. சினைப்பெயர்

42. தொழிற்சாலை என்பது

i. தொழிற்பெயர் ii. பொருட்பெயர்
iii. சினைப்பெயர்

43. பெயரும் வினையுமாக வரும் சொல்

i. கத்தரிக்காய் ii. ஓடினார்கள்
iii. நாடு

---

1. ii
2. iii
3. iii
4. ii
5. iii
6. iii
7. ii
8. iii
9. 
10. 6
11. iii
12. ii
13. i
14. C
15. E
16. D
17. A
18. B
19. i
20. ii
21. iii
22. i
23. iii
24. ii
25. i
26. iii
27. ii
28. ii
29. i
30. i
31. ii
32. iii
33. i
34. ii
35. கரப்பான்
36. சிலந்தி
37. மூட்டைப்பூச்சி
38. ii
39. i
40. iii
41. ii
42. ii
43. iii

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 1 மணி 15 நிமிடம்
வினாப்பத்திரம் II



ஆசிரியர்கள். எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

பின்வரும் பாடலை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

ஞாயிறு உதயமானதும்
கமலங்கள் மலர்ந்ததும்
காகங்கள் கரைந்ததும்
கன்றுகள் துள்ளி விளையாடியதும்
கண்ணே உனக்காகத்தான்
கண்மணியே நீ துயில் எழத்தான்

1. இப்பாடல் பாடப்பட்டிருப்பது
   i. மனிதனுக்கு ii. குழந்தைக்கு
   iii. நோயாளிக்கு
2. இப்பாடலில் சூரியன் என்ற சொல்லுக்கு ஒத்தகருத்தாக வந்த சொல்
   i. கமலம் ii. உதயம்
   iii. ஞாயிறு
3. மலர்ந்ததாகக் கூறப்படுவது
   i. பூ ii. தாமரை
   iii. புஷ்பம்
4. பாடலில் இடம்பெற்ற ஒருமை அஃறிணைச் சொல்
   i. கன்றுகள் ii. கண்மணி
   iii. ஞாயிறு
5. துயில் என்பதன் கருத்து
   i. உறக்கம் ii. மயில்
   iii. மயக்கம்

பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்துக.

6. | ழி | மா | க | ர் | ........................
7. | ளை | கி | கு | உ | க் | ரு | ழ | ங் | ........................
8. | னா | சா | லி | மோ | ........................
9. | ட் | அ | டி | ஞ் | ல் | ச | பெ | ........................
10. | ல் | வி | தா | ர | வ | ய | ........................

பின்வரும் சிங்களச் சொற்களுக்கான கருத்தை எழுதுக.

11. நயா :............................
12. கிரிபத் :............................

கீழே காணப்படும் உருவுக்குப் பொருத்தமற்ற சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.

13. 
   i. கயிறு ii. ஓலை
   iii. எண்ணெய்
   iv. காடு

14. 
   i. உணவு ii. நீர்
   iii. கருவாடு iv. வீடு

கீழ்க்காணும் உருவுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

15. 
   i. தொலைத்தொடர்பு சாதனம்
   ii. செய்திகள் மட்டும் கேட்கலாம்.
   iii. விளையாட்டுச் செய்திகள் மட்டும் கேட்கலாம்.

16. 
   i. இரவும் பகலும்
   ii. இரவும் வெளிச்சமும்
   iii. பகல் வெளிச்சம்

17. மழை பெய்யப் போவதை உணர்ந்து கொள்ளத்தக்க விலங்கின் நடத்தை எது?
   i. கிளி பேசுதல்
   ii. மயில் தோகை விரித்து ஆடுதல்
   iii. குயில் கூவுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. பகலில் கண் பார்வை நன்றாகத் தெரியாத பறவை எது?

i. ஆந்தை ii. காகம்
iii. கழுகு

19. பின்வரும் எத்தாவரத்தில் பால் வடியும்?

i. வெண்டி ii. எருக்கலை
iii. கத்தரி

20. சுவர் ஒன்றை நிலைக்குத்தாகக் கட்டியெ முப்பப் பயன்படுவது எது?

i. மட்டப்பலகை ii. தூக்குக்குண்டு
iii. நீர்மட்டம்

21. இலங்கையில் ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் பொறுப்பாக இருப்பவர் யார்?

i. ஜனாதிபதி ii. ஆளுனர்
iii. அரசாங்க அதிபர்

22. பின்வரும் செயல்முறைகளை ஓர் ஒழுங்குப் பிரகாரம் இலக்கமிடுக.

1. கரையை அடைந்தனர். ☐
2. வலை வீசி மீன் பிடித்தனர். ☐
3. மீன்களை நல்ல விலைக்கு விற்றனர். ☐
4. மீனவர்கள் இயந்திரப் படகுகளில் ஆழ்க டலை அடைந்தனர். ☐
5. படகுகள் மீன்களால் நிறைந்து காணப் பட்டன.

பின்வரும் சொற்களில் ஒன்று வித்தியாச மானது. அதனைக் கோடிடுக.

23. மாதா, பிதா, அன்னை, தாய்

24. வாவி, நதி, ஆறு, கங்கை

பின்வரும் வாக்கியங்களில் எழுவாய் அடைமொழிக்கு மட்டும் கோடிடுக.

25. புள்ளிமானை கொடிய வேடன் துரத்தினான்.

26. கருமையான காகம் கருங்குயிலைக் கொத் தியது.

பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கான கருத்தை எழுதுக.

27. Bell : ..........................................

28. Butter : ..........................................

29. கீழ்வரும் சொற்களை அவதானித்து விடை தருக.

ஆ - பசு

பா - செய்யுள்

....... - சோலை

மா - பெரிய

சரி பிழையைத் தெரிந்து எழுதுக.

30. உலகின் தலைசிறந்த சிந்தனையாளர் சோக் ரட்டீஸ். ( )

31. முதலாவது ஒலிம்பிக் போட்டி அமெரிக் காவில் நடைபெற்றது. ( )

32. ஆயுத எழுத்து ஒன்றாகும். ( )

33. தேநீர் என்பது சரியாக எழுதப்பட்ட சொல் லாகும். ( )

34. ஆந்தை அலறும். ( )

கட்டத்தினுள் உள்ள சரியான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கல்வி | மரியாதை இராமன் | பாரதம் | வாழைப்பழம் | கிட்டிகொக் | |

35. இந்தியாவை .............. எனவும் அழைப்பர்.

36. ரைட் சகோதரர்களின் விமானம் ......... ஆகும்.

37. அழிவில்லாச் செல்வம் .................. ஆகும்.

38. ...................... தென்னாலி ராமனை ஒத்தவர்.

39. ................ ஏழைகளின் அப்பிள் எனப்படும்.

40. மழை பெய்த போது எனது அம்மா தொலைக் காட்சி, குளிரூட்டி ஆகியவற்றினை இயக்காது நிறுத்திவைக்கக் காரணம்

i. அதிக மின் செலவு ஏற்படும் என்று
ii. சுற்றாடல் குளிர்ச்சியாக இருப்பதனால்
iii. இடி, மின்னல் போன்றவற்றிலிருந்து பாது காப்புப் பெறுவதற்கு

41. பச்சையாக உண்ணக்கூடிய உணவு அல்லாதது

i. மரவள்ளி ii. தக்காளி
iii. அகத்தி இலை

42. பின்வரும் இலைகளுள் மணக்கும் இலை எது?

i. தென்னை ii. தேயிலை
iii. வாழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. வருடம் முழுவதும் பூத்துக்காய்க்க முடியாத தாவரம்

i. வாழை ii. தென்னை
iii. மரமுந்திரிகை

44. வியாபாரி ஒருவர் 3220 பத்திரிகை வைத்திருந்தார். அதில் 909 பத்திரிகை மிகுதியாக இருந்தது. அவர் விற்பனையான பத்திரிகையின் தொகை. ................

45. ஒரு பைக்கற்று ஒன்றில் 7 இனிப்புக்கள் இருக்குமாறு 714 இனிப்புகளை கொண்டு தயாரித்த இனிப்புப் பைக்கற்றுகளின் எண்ணிக்கை யாது? ...............

46. 2 kg அரிசி நான்கு சமபொதிகளாகப் பொதி செய்யப்பட்டது. ஒரு பொதியின் நிறை ..........g

**மிகச் சரியான சொல் வரிசையின் கீழ் கீறிடுக.**

47. i. மான், மரை, முயல்
ii. கரட், மரவள்ளி, போஞ்சி
iii. காகம், கிளி, புறா

48. i. நீலம், சிவப்பு நிறங்கள்
ii. ஆடு, மாடு, கோழி
iii. பலா, வேம்பு, தேக்கு

**அடைப்புக்குள் வர வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.**

49. [5|2|3|7] → [6|3|4|8]
[7|1|7|8] → [ | | | ]

i. 7, 5, 7, 3 ii. 8, 2, 8, 9
iii. 6, 6, 6, 7

50. (2)(7)(1)(3) → (1)(6)(0)(2)
(4)(6)(8)(7) → ( )( )( )( )

i. 3, 5, 7, 6 ii. 7, 6, 5, 3
iii. 6, 5, 3, 7

51. இன்று வெள்ளிக்கிழமை, நாளை மறுநாள் என்ன நாள்?

i. ஞாயிறு ii. சனி
iii. திங்கள்

52. முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்யும் பிராணி எது?

i. முயல் ii. எலி iii. ஓணான்

53. பின்வரும் பூக்களிடையே நறுமணம் வீசும் பூ எது?

i. செவ்வரத்தை ii. எக்ஸோரா
iii. மல்லிகை

54. 600 இன் அரைவாசியுடன் 30ஐ கூட்டினால் வரும் விடை

i. 303 ii. 300
iii. 330

55. பத்தாயிரத்துப் பத்து என்பதை இலக்கத்தில் எழுதினால் வருவது.

i. 10010 ii. 10110
iii. 10100

56. நான் வளர்த்த பூனைக்குட்டி என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு சொற்களை யேனும் கொண்டிருத்தல் அவசியம்.

**பகுதி 2 விடைகள்**

| | |
|---|---|
| 1. ii | 31. ✗ |
| 2. iii | 32. ✓ |
| 3. ii | 33. ✓ |
| 4. iii | 34. ✓ |
| 5. i | 35. பாரதம் |
| 6. மார்கழி | 36. கிட்டிகொக் |
| 7. உருளைக்கிழங்கு | 37. கல்வி |
| 8. மோனாலிசா | 38. மரியாதை இராமன் |
| 9. அஞ்சல் பெட்டி | 39. வாழைப்பழம் |
| 10. தாவரவியல் | 40. iii |
| 11. பாம்பு | 41. iii |
| 12. பாற்சோறு | 42. ii |
| 13. iv | 43. iii |
| 14. iv | 44. 2311 |
| 15. i | 45. 102 |
| 16. iii | 46. 500g |
| 17. ii | 47. iii |
| 18. i | 48. iii |
| 19. ii | 49. ii |
| 20. ii | 50. i |
| 21. iii | 51. i |
| 22. 4, 2, 5, 1, 3 | 52. iii |
| 23. பிதா | 53. iii |
| 24. வாவி | 54. iii |
| 25. கொடிய | 55. i |
| 26. கருமையான | |
| 27. மணி | |
| 28. வெண்ணெய் | |
| 29. கா | |
| 30. ✓ | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச முதியோர் தினம்

**ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 1ம் திகதி சர்வதேச முதியோர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.**

- முதியோர்களை மதித்து, மரியாதை செலுத்தி அவர்கள் ஆற்றிய சேவைகளை நினைவுகூர்ந்து அவர்களது அறிவு, ஆற்றல்கள் மற்றும் சாதனைகளை பார்த்து கற்றுக் கொள்ளும் நாளாக இத்தினம் கொண்டாடப்படுகிறது.
- 1990ல் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை அக்டோபர் முதலாம் திகதியை சர்வதேச முதியோர் தினமாக பிரகடனம் செய்தது.



- 1வது சர்வதேச முதியோர் தினம் 1991ல் கொண்டாடப்பட்டது.
- பொதுவாக 60 வயதை தாண்டியோரே முதியோர்கள் என வரையறை செய்யப்பட்டுள்ளனர்.
- தற்போது உலக சனத்தொகையில் 10 பேருக்கு 1 நபர் 60 வயதை தாண்டியவராக காணப்படுகின்றனர்.
- 2050ல் இது ஐந்து பேருக்கு ஒன்றாகவும் 2150ல் 3 பேருக்கு ஒன்றாகவும் காணப்படும் என எதிர்வு கூறப்படுகிறது.




# சர்வதேச ஆசிரியர் தினம்

**ஒக்டோபர் 5ம் திகதி சர்வதேச ஆசிரியர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.**

- ஆசிரியர்களின் முக்கியத்துவத்தை உணர்த்தி அவர்களால் ஆற்றப்படும் பங்களிப்பினை மரியாதை செய்யும் முகமாகவே இத்தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.
- 1994ம் ஆண்டு முதன் முதலாக ஐக்கிய நாடுகள் தாபனத்தின் அனுசரணையுடன் சர்வதேச ஆசிரியர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.
- "ஆசிரியர்களுக்கான ஓர் அழைப்பு" என்பதே 2013ம் ஆண்டிற்கான ஆசிரியர் தின கருப்பொருளாகும்.

**"யார் எனக்கு ஓர் எழுத்தையேனும் கற்றுத் தருகிறாரோ அவருக்கு நான் அடிமையாக இருப்பேன்"**
**- அலி (ரழியல்லாஹு அன்ஹு)**

**"யார் எனக்கு கற்றுத் தருகிறாரோ அவர் எனது மரியாதைக்கும் கண்ணியத்திற்கும் கவனித்தலுக்கும் தகுந்தவராவார்." - சோனியா ருன்சீ**

**"உனக்கு இதனை வாசிக்க முடிந்தால் ஆசிரியருக்கு நன்றி சொல்" - அமெரிக்க பழமொழி**


facebook இல் Like செய்யுங்கள்...
www.facebook.com/aharamJmf



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org